10. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் தமது அடிப்படைச் சம்பளத்தில் 4 விகிதமானதை தமது உதவு தொகையாக படைக்கலந் தாங்கு சேவைகளின் விதவை அநாதை உபகாரச் சம்பள நிதிக்கு வழங்குவதற்கு எழுத்துமூலம் தமது சம்மதத்தை கொடுத்தல்வேண்டும்.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
தரைப்படைத் தளபதிக்காக.

9.10.1970.

## இலங்கை தரைப்படையில் தொழிற்சேவைகள், இலங்கை பொறியியலாளர் பிரிவில் மின்சாரமும் பொறியியலாளரும் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) : —

2. தேசிய இனம் : (பரம்பரையான இலங்கைப் பிரசையா அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுக. பதிவு செய்யப்பட்ட பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும்

3. திகதியையும் குறிப்பிடுக) : ————.

முகவரி : வீட்டு விலாசம் : ————.
அலுவலக விலாசம் : ————.

4. பிறந்த திகதி :————.

5.11.70 திகதியன்று வயது :
வருடம் : ————. மாதம் : ————. நாள் : ————.

5. பிறந்த இடத்தின் பெயரும் தற்போதைய முகவரியும் : ————.

| | முழுப் பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை .. | | | |
| தாய் .. | | | |

6. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? : ————.

7. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுகள் சம்பந்தமாக நீர் பெற்ற தனிச்சிறப்புகள் : ————.

8. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் : ————.

9. இலங்கை தொண்டர்படை, இலங்கை சாரணர்படை, இலங்கை பயிலுனர் சிறப்பணி முதலிய தொண்டர் நிறுவகங்களில் சேவை செய்திருப்பின் அவற்றின் விபரங்கள் : ————.

10. இந்நியமனம் சம்பந்தமாக உமக்குரிய வேறு விசேட தகைமைகள் என்ன என்பதைக் குறிப்பிடுக : ————.

11. இதற்குமுன் படைக்கலந்தாங்கு சேவைகளின் ஏதாவது ஒன்றிற்கு விண்ணப்பம் செய்திருப்பின் அதன் முடிவு யாதெனக் குறிப்பிடுக : ————.

12. கீழ்க்காணும் பாடசாலை அல்லது சர்வகலாசாலை விபரங்களைத் தருக : ————.

| பாடசாலையின் அல்லது சர்வகலா சாலையின் பெயர் | சேர்ந்த விலகிய திகதி | பொது/உயர்தொழிற்/ கல்வி சித்தியடைந்த பாடங்கள் |
|---|---|---|
| | | |

13. பாடசாலை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகியபின் நீர் செய்த தொழில் விபரங்களைத் தருக : ————.

| வேலைகொள்வோரின் பெயர் | செய்த தொழில் | சேவை செய்த காலம் தொடக்கம் வரை |
|---|---|---|
| | | |

14. குணச்சான்றுப்பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும் முகவரி விபரங்களும் : ————.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்களும் தகுதிகளும் எனது அறிவிற் கெட்டிய வரையில் அவை சரியானவை என்றும் உண்மையானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
திகதி : ————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

10–551—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

---

## இலங்கை தரைப்படையில் அதிகாரிகள் ஆளின்மை

இலங்கை தரைப்படையில் சட்டமுறை உத்தியோகத்தர் நியமனத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் நிரந்தர அரசாணை அமர்வு செய்யப்பட்டு தற்காலிக மேஜர் பதவியில் அமர்த்தப்பட்டு இலங்கை இராணுவ பொது சேவைப் படையில் சேர்த்துக்கொள்ளப் படுவர்.

3. (அ) சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்ப காரர்களுக்கு பதவிக்கேற்ப சம்பளமும் சகாயப்பணமும் பின்வருமாறு கொடுக்கப்படும் :—

கப்டன் — வருடம் ஒன்றிற்கு ரூபா 9,240—8 × 180—ரூபா 10,680 வரை
(மாதமொன்றிற்கு ரூபா 770—8 × 15—ரூபா 890 வரை)

மேஜர் — வருடம் ஒன்றிற்கு ரூபா 11,400—8 × 240—ரூபா 13,320 வரை
(மாதமொன்றிற்கு ரூபா 950—8 × 20—ரூபா 1,110 வரை)

லெப்டினனட் கேர்னல்— வருடம் ஒன்றிற்கு ரூபா 15,000—7 × 360—ரூபா 17,520 வரை)
(மாதமொன்றிற்கு ரூபா 1,250—7 × 30 —ரூபா 1,460 வரை)

(ஆ) கீழ்க்குறிக்கப்பட்டுள்ள படிகளும் கொடுக்கப்படும்:

### மணமான அதிகாரிகளின் பணிக்கொடை

மாதம் ஒன்றிற்கு ரூபா 750 ம் ரூபா 775 க்கு குறையவும்—மாதம் ரூபா—97.50.

மாதம் ஒன்றிற்கு ரூபா 775 ம் அதற்குக் கூடவும்—மாதம் ரூபா 100.00

### வேறு ஏனைய பணிக்கொடைகள்

(i) தொடக்க அணியடுக்கு பணிக்கொடை ரூபா 1,000/–.

(ii) கோல அணிபேணல் பணிக்கொடை மாதம் ரூபா 25/–.

(iii) வெளியில் வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட மணமான, மணமாகாத அதிகாரிகளுக்கு மாதம் ஒன்றிற்கு சேவையாளர் பணிக்கொடை மாதம் ரூபா 75/–.

(iv) பிரிந்திருக்கைப்படி—

(1) தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு அதிகப்படாத கால வரையறைக்கு, வழமையான கடமைகளின் காரண மாக, பாசறையினுள் வசிக்கும்படி மணமான அதிகாரி களுக்கு கட்டளையிட்டிருந்தால் நாளொன்றுக்கு ரூபா 1.50.

(2) அவசரகால நிலைமைக்காகவோ அல்லது விசேடமான கடமைகள் காரணமாகவோ தொடர்ச்சியாக 14 நாட் களுக்கு அதிகமான காலவரையறைக்கு பாசறையினுள் வசிக்கும்படி மணமான அதிகாரிகளுக்கு கட்டளையிட்டி ருந்தால், நாளொன்றுக்கு ரூபா 2/–.

(v) பிரயாண அத்துடன் இணைந்த பணிக்கொடைகள் அரசாங்க அதிகாரிகளுக்கு கொடுபடும் படியாகும்.

(இ) உத்தியோகத்தர்கள் கீழ்க்காணப்படும் ஒழுங்குவிதிகளின்படியும் அவரவர்களின் சம்பளம், சேவைக்கேற்பவும் ஆளப்படும்.

(i) 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ம் திகதிய 12,395 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை வேதனச் சட்டக் கோவையின் பிரகாரம் காலத்திற்குக் காலம் செய்யப் படும் திருத்தங்களுக்கும் இணங்க.

(ii) 1949 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 10 ம் திகதிய 10,028 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1949 ஆம் ஆண்டு உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்குவிதிகளுக்கும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

(iii) 1961 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் 28 ம் திகதிய 12,680 இலக்கத்தையுடைய இலங்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை உபகாரச் சம்பள பணிக்கொடைச் சட்டக் கோவைக்கும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

மற்றும் ஏனைய தகவல்கள் கொழும்பு, தரைப்படைத் தலைமை நிலையத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் :—

(அ) **தேசிய இனம் :** விண்ணப்பகாரர்கள் இலங்கைப் பிரசையா யிருத்தல் வேண்டும்.

(ஆ) **வயது :** விண்ணப்பகாரர்கள் 1970.11.5 திகதியன்று 35 வயதுக்குக் கூடாதவராயிருத்தல் வேண்டும்.

(இ) **கல்வித்தகைமையும் உயர்தொழிற்றகைமையும் :** விண் ணப்பகாரர்கள் வழக்குரைஞர்களாகவோ அல்லது வழக் கறிஞர்களாகவோ இருந்தலுடன் இலங்கை உயர் நீதி மன்றத்தில் நான்கு வருடத்துக்குக் குறையாத சட்ட வறிஞர் அங்கத்தவராக தீவிர பயிற்சி அனுபவம் உடைய வராயும் இருத்தல் வேண்டும்.

(ஈ) **வைத்திய தகைமைகள் :** விண்ணப்பகாரர்கள் தரைப்படை வைத்தியப்பரிசோதனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் யாவும் கீழ்க்காணும் விண்ணப்பப் படிவத்தினைப் போன்று எழுதப்பட்டு 1970.11.5 திகதியன்று பகல் 12 மணிக்குப் பிந்தாமல், தரைப்படை தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு, என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப் பங்கள் அனுப்பும் கடிதவுறையில் " தரைப்படைச் சட்ட உத்தியோகத்தர் களுக்கான விண்ணப்பம் " என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முடிவு திகதிக்குப்பின் இத்தலைமை நிலையத்தில் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

6. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்கள், இலங்கை அரச கடற்படை, இலங்கை அரச ஆகாயப்படை உட்பட, தம் திணைக்களத் தலைவருக்கூடாகத் தம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விண்ணப்பகாரர்கள் தெரிவு செய்யப்படின் அவர்கள் சேவையில் இருந்து விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழ் ஒன்றும்

இணைத்தனுப்புதல் வேண்டும். இச் சான்றிதழ் அனுப்பப்படாத விடத்து அரசாங்க பணிக்கொடை சேவைகள் இராணுவ பணிக்கொடைச் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

7. விண்ணப்பங்களுடன் இவைகளின் பிரதிகள் இணைத்தனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்பிச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தகைமைகளையும் உயர்தொழில் தகைமைகளையும் நிரூபிக்கும் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரருடன் பரிச்சயமுடைய பொறுப்புவாய்ந்தவர் களினால் வழங்கப்பட்ட குறைந்த பட்சம் இரு நற்சான்றுப் பத்திரங்கள்.

8. மேலே கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர் களிலிருந்து தொடக்கத் தெரிவு செய்யப்படும். இதன் பின் இறுதித் தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்களில் இருந்து வெளிநாட்டலு வல்கள் அமைச்சினால் நியமிக்கப்படும் தேர்வுச்சபை ஒன்றினால் நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படும். தேர்வுச் சபைகளினால் நேர்முகப் பரீட்சைகளுக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரருக்கு அத்தகையமை பற்றி இடம், நேரம், திகதி, காலம் என்பன எழுத்து மூலம் அறிவிக்கப் படும். நேர்முகப்பரீட்சைகள் யாவும் கொழும்பில் நடாத்தப்படும். இத் தொடர்பில் ஏற்படும் எவ்வித பிரயாணச் செலவோ அல்லது பிற செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் கொடுக்கப்படமாட்டாது.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கென விசேடமாக அரசாங்க மொழியதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் இராணுவ பயிற்சி செய்யப்பட்டுப் பின் சட்டமுறை தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு ஏதாவது ஓர் படைப்பிரிவில் அமர்த்தப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப காரர்கள் நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்யுமாறு வேண்டப் படுவர்.

11. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் தமது அடிப்படைச் சம்பளத்தில் 4 விகிதமானதைத் தமது உதவு தொகையாக படைக் கலந்தாங்கு சேவைகளின் விதவை அனாதை உபகாரச்சம்பள நிதிக்கு வழங்குவதற்குத் தம் சம்மதத்தை எழுத்துமூலம் கொடுத்தல்வேண்டும்.

12. சட்டமுறை உத்தியோகத்தர் பதவிக்கான 1969.12.12 ம் திகதிய 14,844 இலக்கத்தையுடைய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் இத்தால் மூலம் நிராகரிக்கப்படுவதுடன் அவ் விளம்பரத் திற்கு இணங்க விண்ணப்பம் செய்த விண்ணப்பகாரர்கள் அனைவரும் இவ்விளம்பரத்திற்கு இணங்க திரும்பியும் விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

எம். எ. ஜயவீர,
பிரிகேடியர்,
தரைப்படைத் தளபதிக்காக.

1970, ஒக்டோபர் 9.

**இலங்கை தரைப்படையில் சட்டமுறை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) : ————.

2. தேசிய இனம் (பரம்பரைய ான இலங்கைப் பிரசையா அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடவும். பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தை யும் திகதியையும் குறிப்பிடுக) : ————.

3. முகவரி : வீட்டு விலாசம் : ————.
அலுவலக விலாசம் : ————.

4. பிறந்த திகதி : 5.11.70 திகதியன்று வயது :—
வருடம் : ————. மாதம் : ————. நாள் : ————.

5. பிறந்த இடத்தின் பெயரும் தற்போதைய முகவரியும் : ————.

| | முழுப் பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை .. | | | |
| தாய் .. | | | |

6. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? : ————.

7. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற்பயிற்சி விளையாட்டு களில் நீர் பெற்ற தனிச்சிறப்புகள் : ————.

8. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் : ————.

9. படைக்கலந்தாங்கு சேவைகளில், இலங்கை தொண்டர் படை, இலங்கை பயிலுநர் சிறப்பணி, அல்லது சாரணர் படை ஆகிய நிறுவகங்களில் சேவை செய்திருப்பின் அதன் விபரங்கள் : ————.

10. இந் நியமனம் சம்பந்தமாக உமக்குரிய வேறு விசேட தகை மைகள் : ————.

11. இதற்குமுன் படைக்கலந் தாங்கு சேவைகளில் ஏதாவது ஒன்றிற்கு விண்ணப்பித்திருப்பின் அதன் முடிவு என்ன என்பதைக் குறிப் பிடுக : ————.

12. கீழ்க்காணும் பாடசாலை அல்லது சர்வகலாசாலையின் விபரங்களைத் தருக :—

பாடசாலை அல்லது சர்வகலாசாலையின் பெயர் : ————.

சேர்ந்த திகதி : ————.

விலகிய திகதி : ————.

பொது/உயர்தொழில் கல்வி சித்தியடைந்த பயிற்சிகள் : ————.

13. பாடசாலையை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய பின் நீர் செய்த தொழில் விபரங்களை கீழே தருக :—

வேலை கொள்வோரின் பெயர் : ————.

செய்த தொழில் : ————.

சேவை செய்த காலம் :
..................தொடக்கம்.....................வரை

14. நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும் முகவரி யும் : ————.

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விடைகளும் தகைமைகளும் சரியானவை என்றும் உண்மை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

10—548—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

---

## இலங்கை தரைப்படையில் வெற்றிடங்கள்—படையினர் நியமனம்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையில் படையினராக (புதிய போர்வீரர்) சேரக் கீழ்க்காணப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

2. **வேண்டப்படும் தகைமைகள்:**—விண்ணப்பகாரர்கள் ஒவ்வொருவரும்—

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்பு சிங்களம், அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கனிஷ்ட தராதரப் பத்திரம் (8 வகுப்பு) அல்லது அதற்குகக் கூடிய கல்வித் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(இ) அரசகரும மொழியில் தேர்ச்சியுண்டு என்பதை தெளிவாக அத்தாட்சிப் படுத்துதல் வேண்டும்.

(ஈ) 5 அடி 4 அங்குலத்துக்குக் குறையாதவராயிருத்தல் வேண்டும். உயரத்தில் 5 அடி 6 அங்குலத்திற்குக் கூடிய உயரம் உடையோ ருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(உ) 1971 ஆம் ஆண்டு சனவாரி மாதம் 1 ம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 24 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும்.

(ஊ) தரைப்படைத் தளபதியின் திருப்திக்கேற்ப வைத்தியப் பரி சோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

3. 2 ம் பந்தி (ஆ), (ஈ) பிரிவில் கேட்கப்பட்டுள்ள கல்வித் தகைமையும், உடல் அமைப்பும் ஆகக் குறைந்தவையே, 2 ம் பந்தியில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

**4. சேவைக்கால நிபந்தனைகள் :**

**சேவைக்காலம்.**— ஒரு போர்வீரர் பன்னிரண்டு வருட கால சேவைக்குப் பதிவு செய்யப்படுவார். இதில் 5 வருட காலம் பூரண சேவையிலும், பின் 7 வருடகாலம் மேற்படையிலும் சேவை செய்யப்படலாம். பின் இராணுவத்தில் இருந்து விலக்கப்படலாம். ஒரு போர்வீரர் பன்னிரண்டு வருடகால சேவையின் பின் பிறகாரணங்களைக் கொண்டு மீண்டும் சேவைக்காகச் சேர்த்துக் கொள்ளப்படலாம். இச்சேவை காலம் எல்லா வற்றினதும் மொத்தம் முப்பத்திரெண்டு வருடங்களாகும்.

சேர்த்துக்கொள்ளப்படுபவர்கள், 1949 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தரைப்படை அதிகாரச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கும், கட்டளைகளுக் கும் இணங்கி நடத்தல் வேண்டும்.

**5. சம்பள விகிதமும் படிகளும் :**

(அ) தரைப்படையின் நிரந்தரப்படையின் தொழில் நுணுக்கமற்ற போர் வீரர், பிற வரிசையினருக்கான சம்பள விகிதமும் படி களும் பின்வருமாறு :-

| **வரிசை** | **முழுச்சம்பளம் (வருடம்)** |
|---|---|
| புதிய போர்வீரர் | ரூபா. 2,700. |
| படையினர் அல்லது சமமான | ரூபா. 2,880—15 × 60—ரூபா. 3,781 |
| லான்ஸ் கோபரல் அல்லது சமமான | ரூபா. 3,060—15 × 60—ரூபா. 3,960 |
| கோபரல் அல்லது சமமான | ரூபா 3,666—15 × 72—ரூபா. 4,740 |
| சார்ஜன்ட் | ரூபா. 4,620—10 × 90—ரூபா. 5,520 |
| ஸ்டாப் சார்ஜன்ட் | ரூபா. 5,010—10 × 90—ரூபா. 5,910 |
| ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் II | ரூபா. 5,220—10 × 120—ரூபா. 6,420 |
| ரெஜிமென்டல் குவாடர் மாஸ்டர் சார்ஜன்ட் | ரூபா. 5,340—10 × 120—ரூபா. 6,540 |
| ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் I | ரூபா. 5,640—10 × 144—ரூபா. 7,080 |

**குறிப்பு :** (1) ஒரு படையினரின் மாதச் சம்பளம் தரம் 2 க்குத் தகைமையுடையவரானால் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 280/– க்கு மேற்படும். தரம் 3 க்கு தகைமையுடையவரானல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 295/– க்கு மேற்படும்.

(2) ஒரு லான்ஸ் கோபரலின் மாதச் சம்பளம் தரம் 2 க்கு தகைமை யுடையாரானல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 295/– க்கு மேற்படும். தரம் 3 க்கு தகைமையுடையவரானல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 315/–க்கு மேற்படும்.

(3) ஒரு கோபரலின் மாதச் சம்பளம் தரம் 3 க்குத் தகைமையுடைய வரானல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 365/– க்கு மேற் படும். (தரம் 3 க்கு தகைமையுடையவரல்லாத எந்த ஒரு பிற வரிசையினரும் கோபரல் நிலைக்கு பதவி உயர்ச்சி செய்யப்படமாட்டார்கள்)

**(ஆ) விவாகமான பிற வரிசையினருக்கான வாழ்க்கைச் செலவுப்படிகள் :**

விவாகமான பிற வருசையினருக்கு அரசாங்க பொது ஊழியர் களுக்குப் போன்ற முறையிலான விகித வாழ்க்கைச் செலவுப் படிகள் வழங்கப்படும்.

**(இ) சலவைச் செலவுப்படி :**

(1) தரைப்படைப் பாசறையில் வசிக்கும் போர்வீரர்கள் தம் தரைப்படை உடைகள், தரைப்படையின், செலவில் இலவசமாகச் சலவை செய்துகொள்ள அருகதையுடைய வராவார்கள்.

(2) தரைப்படைப் பாசறைக்கு வெளியே வசிக்கும் போர் வீரர்கள், தரைப்படைத் தளபதியின் நிர்ணயத்திற்கேற்ப தனது தரைப்படை உடைகளைச் சலவை செய்து கொள் வதற்காக ஒரு சலவைச் செலவுப்படியையும் பெற அருகதையுடையவராவார்கள்.

**(ஈ) பிரிந்திருக்கைப்படி :**

விவாகமான போர்வீரர்கள் பாசறையினுள் வசிக்கும்படி கட்டளை யிடப்பட்டால் அவர்களுக்குப் பிரிந்திருக்கைப்படியொன்று வழங் கப்படும். இக்கால வரையறையில் அவர்களுக்கு உணவுக்காகச் செலவிடப்பட்டதற்கு ஒரு நாளைக்கு ரூபா 2 வீதம் கழிக்கப்படும்.

**(உ) நன்னடத்தைப்படி :**

கீழ்குறிப்பிடப்பட்ட முறையில் பிறவரிசையினருக்கு நன்னடத்தை ப்படி வழங்கப்படும்.

1 வது பட்டியல்— 4 வருட சேவைக்காலத் தகைமை பேறுடை யோருக்கு—ஒரு நாளைக்கு .25 சதவீதம்.

2 வது பட்டியல்— 8 வருட சேவைக்காலத் தகைமைப் பேறுடை யோர்க்கு—ஒரு நாளைக்கு .50 சதவீதம்.

3 வது பட்டியல்— 12 வருட சேவைக்காலத் தகைமைப் பேறுடை யோருக்கு—ஒரு நாளைக்கு. 75 சதவீதம்

(ஊ) கீழ்க்குறிப்பிட்ட வகையிலான கஷ்டப்பணிக்கொடைகள் பிறவரிசை யினருக்கு வழங்கப்படும் :—

(1) மன்னர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கள்ளக்கடத் தல், குடியேற்றத்தடுப்பு வேலைகளுக்காக சேவைக்கு நியமித்தால்.

(2) வளவை, பதவிய, முதியன்கட்டிகுளம் ஆகிய இடங்களில் விவசாய வேலைகளுக்கு நியமிக்கப்பட்டால்.

(3) தரைப்படைத் தளபதியினல் நிர்ணயிக்கப்பட்ட பொறியியல் வேலைகளுக்கு நியமிக்கப்பட்டால்.

(எ) **கைம்பெண் அநாதைப்பிள்ளைகளின் உபகாரச் சம்பள நிதி :** போர்வீரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் ஒவ்வொருவரும் தன் சம்பளத்தின் 4 விகிதமானதைக் கழித்துத் தனது உதவு தொகையாக படைக்கலந்தாங்கு சேவைகளின் கைம்பெண் அநாதைப்பிள்ளைகளின் உபகாரச் சம்பள நிதிக்குச் சேர்ப்பதற்கு எழுத்துமூலம் தம் சம்மதத்தைக் கொடுத்தல் வேண்டும்.

6. இவ்வறிவித்தலின் 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலி ஸ்தானங்களுக்கு விண்ணபிக்கும் விண்ணப்பங்கள் யாவும் கீழ்க்குறிப்பி டப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் யாவும், இவ்வறிவித்தலின் இறுதியில் காணப் படும் மாதிரிவிண்ணப்பப்பத்திரத்தை போனறதாகவும், விண்ணப்பகாரர்களின் சொந்தக்கையெழுத்தினல் தயாரிக்கப பட்டதாகவும் இருத்தல் வேண்டும.

(ஆ) விண்ணப்பங்கள் யாவும், தரைப்படை ஆள்திரட்டும் அதிகாரி, தரைப்படை தலைமை நிலையம், அஞ்சல் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்திலும் அவற்றை அனுப்பிவைக்கும் கடித உறையிலும் " விண்ணப்பங்கள்—நிரந்தரப்படை—புதிய போர்வீரர்கள் " என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள்யாவும் 1970 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 5 ம் திகதி 12.30 மணிக்கு முன் தரைப்படைத் தலைமை நிலையத்தில் சேரவேண்டும்.

(இ) விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் **பிரதிகள் மட்டுமே** இணைத்தனுப்புதல் வேண்டும் :

(1) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (அல்லது பிறப்பு பதிவு செய்யப்படாத விண்ணப்பகாரர்களைப் பொறுத்த வரையில்) பிரதம பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட விசேட வயதுச் சான்றிதழ். ஞானஸ்நானப்பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கு அமையக் கொடுக்கப்பட்ட பிறப்பு சான்றுப் பத்திரம் அல்லது ஜாதகம் இதுபோன்ற வேறும் பிறப்புக் குறிப்புகள் எதும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

(2) பெற்றுக்கொண்டுள்ள ஆகக் கூடிய கல்வித் தகைமையைக் காட்டும் கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(3) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்டனவும் விண்ணப் பகாரரின் கல்வித்தகைமை, நடத்தை, விண்ணப்பிக்கும் பதவிக்கான தகுதி என்பனபற்றிக் குறிப்பிடும் மூன்று நற்சான்றுப் பத்திரங்கள், ஒரு விண்ணப்பகாரர் ஏற்கனவே தொழில் செய்பவரானல் இதில் ஒன்று அவரது தற்போதைய மேலதிகாரியால் கொடுக்கப்பட் டதாக இருத்தல் வேண்டும்.

(4) விளையாட்டு, பயினுநர் சிறப்பணிப் பயிற்சிகள் சம்பந்தமான சான்றிதழ்கள்.

**குறிப்பு.**—(1) விண்ணப்பகாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டால் மாத்திரமே இச்சான்றுப் பத்திரங்களின் உண்மைப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(2) விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பியதன் மூலம் தவறி அல்லது காணமல் போகும் எவ்விதமான தஸ்தாவேஜுகளின் உண்மைப்பிரதிகள் சம்பந்தமாக தரைப்படை தலைமை நிலையம் எந்தவிதமான பொறுப் பும் ஏற்றுக் கொள்ளமாட்டாது.

(ஈ) தபாலில் அனுப்பியதால் தவறும் அல்லது தாமதமாகும் விண்ணப்பங்கள் சம்பந்தமாகச் செய்யப்படும் எவ்விதமான முறையீடுகளும் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(உ) இலங்கை தரைப்படையின் தொண்டர் படையின் அங்கத்தர்வர்கள் தம் விண்ணப்பங்களை தமது சேனைத் தலைமை நிலையத்திற் கூடாக சமர்பித்தல் வேண்டும்.

(ஊ) ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்கள் தம் விண்ணப்பங் களைத் தமது திணைக்களத்திற்கூடாகச் சமர்பித்தல் வேண்டும்.

(எ) அரசாங்கத் திணைக்களத்திற்கூடாக அனுப்பப்பட்ட, ஆனால் உரிய காலத்திற்குப் பின் இத்தலைமை நிலையத்தில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வரையில், தாமதத்திற்குப் போதிய காரணத்தைக் காட்டி, விண்ணப்பங்கள் உரிய காலத்தில் தமது திணைக்களத்தில் கிடைத்ததென்றும் அவ் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படலாம் என்றும் திணைக்களத்தலைவரால் சிபாரிசு செய்யப்பட்டிராது விடத்து, இத்தகைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஏ) தரைப்படைத் தெரிவுக்குழுவால் தகுதியுள்ளவர் எனக் கருதப்படும் விண்ணப்பகாரர்கள் தமது சொந்தச் செலவில் நேர் முகப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரருக்கு அவ்வாறானவை பற்றிய நேரம், திகதி, இடம் என்பன தனித்தனியாக அறிவிக்கப்படும்.

(ஐ) நேர்முகப்பரீட்சைகளினால் சேர்த்துக்கொள்வதற்குத் தகுதியுடையவர் எனக்காணப்படும் விண்ணப்பகாரர்கள், தமது சொந்தச் செலவில் ஒன்று அல்லது பல வைத்தியப் பரிசோதனைகளுக்கு கொழும்பில் சமூகமளிக்க வேண்டும்.

(ஒ) தேவையான பரிசோதனைகளையும், நேர்முகப்பரீட்சைகளையும் தேர்ச்சியாய் முடித்த விண்ணப்பகாரர்கள் தரைப்படையின் நிரந்தரப்படையில் சேர்க்கப்பட்டு, தரைப்படைப் பயிற்சி நிலையத்தில் அல்லது வேறேதேனும் இடத்தில் பயிற்சிக்காக அனுப்பப்படுவர்.

(ஓ) தமது பெற்றோரின் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரின் சம்மதத்தை எழுத்துமூலம் சமர்ப்பித்தாலன்றி எந்த ஒரு 21 வயதுக்குக் குறைந்தவரும் தரைப்படையின் நிரந்தரப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(க) தேர்ந்தெடுக்கப்பட்டு, தரைப்படையின் நிரந்தரப்படையில் சேர்த்துக் கொள்ளப்படும் விண்ணப்பகாரர்கள் அனைவரும் 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் செயல் முறைக் கட்டளைச் சட்டத்திற்கும், அச் சட்டத்தை அமுல் நடத்தும் வகையில் உள்ள எல்லாக் கட்டளைச் சட்டங்களுக்கும் இது சம்பந்தமாக இனிமேல் நடைமுறைக்கு வரும் கட்டளைச் சட்டங்களுக்கும் இணங்கி நடக்குமாறு கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

(கா) எவரேனுமொருவர் ஒரு விண்ணப்பகாரரைச் சிபாரிசு செய்ய விரும்பினால் அவர்களுக்கு ஒரு நற்சான்றுப் பத்திரம் கொடுப்பதன் மூலம் அவரைச் சிபாரிசு செய்யலாம், அன்றி குறித்த விண்ணப்பகாரர் தெரிவு பெறுவான் வேண்டி வேறெந்த வகையிலேனும் அவருக்காகப் பிரசாரம் செய்தல் அல்லது சலுகை பெற முயற்சித்தல் போன்ற வேறும் எத்தனங்கள், சம்பந்தப்பட்ட விண்ணப்பகாரரை நிராகரித்தற்கு ஏற்ற காரணங்களாகும்.

(கி) விண்ணபத்தில் கொடுக்கப்பட்ட தகவல்கள் எவையேனும் பிழையானவை என்று விண்ணப்பகாரர் தெரிவு பெறுவதற்கு முன் கண்டு பிடிக்கப்படின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும், தரைப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின் எப்போதாவது கண்டுபிடிக்கப்படின், சம்பந்தப்பட்டவர் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தரைப்படையில் இருந்தும் விலக்கப்படுவார்.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
தரைப்படைத் தளபதிக்காக.

தரைப்படைத் தலைமை நிலையம்,
அஞ்சல் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு.

### தரைப்படையின் நிரந்தரப் படையில் படையினர் போர்வீரராக (புதிய போர்வீரர்) சேருவதற்கான விண்ணப்பப் படிவம்

1. முழுப்பெயர் (நடித்த எழுத்துக்களில்) : ————.

2. தபால் முகவரி : ————.

3. பிறந்த திகதி : ————. வயது : ————.

4. சித்தியடைந்துள்ள பரீட்சைகள், பாடங்களும் திகதியும் உட்பட : ————.

5. உயரம் : அடி : ————. அங்குலம் : ————

6. நீர் ஒரு இலங்கைப் பிரசையா ? : ————.

7. நீர் விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பதைக் குறிப்பிடுக : ————.

8. பாடசாலையை விட்டு விலகியபின் செய்த தொழில் : ————.

9. தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை, தொண்டர்படை ஆகிய பிரிவுகளில் செய்த சேவை விபரங்களை, பிரிவு திகதி ஆகியவற்றுடன பூரண விபரங்களைத் தருக : ————.

10. வேறு ஏதும் தகுதிகள் இருப்பின் (விளையாட்டுகள் சம்பந்தப்பட்டவை) : ————.

11. அருகாமையில் உள்ள தபால்/தந்தி நிலையம் : ————.

12. அருகாமையில் உள்ள பொலிசு நிலையம் : ————.

13. நற்சான்றுப் பத்திரங்கள் கொடுத்துதவியோரின் பெயர்களும் தகுதிகளும் :
(அ) : ————.
(ஆ) : ————.
(இ) : ————.

14. கொழும்பில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் நடந்த வைத்தியப்பரிசோதனையில் நீர் தரைப்படை, கடற்படை அல்லது ஆகாயப்படை ஆகியவற்றில் ஒன்றில் சேவை செய்வதற்கு தகுதியற்றவர் எனத் தள்ளுபடி செய்யப்பட்டதுண்டா : ————.

15. விண்ணப்பகாரர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டிய உறுதி :
மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகளும் தகுதிகளும் எனது அறிவிற்கெட்டியவரை சரியானவை என்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

10–516—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

## தொழிற் திணைக்களம்

### கட்டுவேலைப் போதனாசிரியர் பதவிகள்

தொழிற் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கட்டுவேலைப் பயிற்சி நிலையங்களின் போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பஞ்செய்வோர் இதனடியிற் குறிக்கப்பட்டுள்ள மாதிரிப் பத்திரத்தைப் பார்த்தெழுதி, 1970 ம் ஆண்டு ஒத்தோபர் 31 ந் தேதியன்றோ அதற்குமுன்னரோ " தொழில் ஆணையாளர், தொழின் முறைப் பயிற்சிக் கிளை, 8 ம் மாடி, தொழிற் செயலகம், கொழும்பு 5", என்ற விலாசத்திற் கிடைக்கும் வண்ணம் விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. **கட்டணம்.**—மாதமொன்றுக்கு சகல படிகளுமுட்பட ரூ. 400 முதல் ரூ. 450 வரை.

**குறிப்பு :** தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்களின் தகைமைகள், அனுபவம், திறன் என்பவற்றை அனுசரித்தே கொடுக்கப்படவேண்டிய உண்மையான தொகை நிருணயிக்கப்படும்.

2. **நியமனத்திற்கான நிபந்தனைகள்**—(அ) நியமனம், முதலாவதாக தொழில் ஆணையாளர் தீர்மானிப்பதற்கிணங்க, ஓராண்டு கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் செய்யப்படும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் சேவை புரிதற்கு நியமிக்கப்படுவர்.

(இ) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ஒவ்வொருவரும் பிணைப்பணமாக ரூ. 1,000 கட்டுதல் வேண்டும்.

3. **வயது வரையறை :** 25 வயதுக்கு உட்படாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்கள் விடயத்தில் மேல் வயது வரையறை இயைபுடையதன்று).

4. **தகைமைகள் :** (i) கல்வி பற்றியன—

(அ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திர அல்லது பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் தோற்றி ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும், அல்லது,

(ஆ) இதற்குச் சமமான அல்லது உயர்வான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும், அத்துடன்,

(ii) நுண்தொழில் பற்றியன—

(அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் இறுதித் தராதரப் பத்திரத்தையுடையவராயிருத்தல் வேண்டும். அல்லது,

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் சிறுதர மேற்பார்வையாளர் தராதரப் பத்திரத்தையுடையவராயிருத்தல் வேண்டும். அல்லது,

(இ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கட்டட அமைப்பு (மாலைப் பயிற்சி நெறி)த் தராதரப் பத்திரத்தை உடையவராயிருத்தல் வேண்டும். அல்லது,

(ஈ) இவற்றிற்குச் சமமான அல்லது உயர்வான தராதரப் பத்திரத்தைப் பெற்றபின், கட்டட அமைப்பில் ஐந்தாண்டு மேற்பார்வை அனுபவம் உடையவராயிருத்தல் வேண்டும்.

குறிப்பு : இத்தொழிலில், (பயிற்சி யாதாயினுமுட்பட) 15 ஆண்டு அனுபவமுடையராகி, 7 ம் வகுப்பிலாயினும் தேர்ச்சி பெற்ற எவரும் இப்பதவிகளுக்கு விண்ணப்பித்தற்குத் தகுதியுடையராவர்.

5. விண்ணப்பக்காரர்கள் யாவரும் தொழிற் சோதனையொன்றில் சித்திபெறவேண்டியவர்களாவர்.

6. அரசாங்க சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் அந்தந்தத் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல்வேண்டும். அவ்வபேட்சகர்கள் தெரிவுசெய்யப்படுமிடத்து, அவர்களைச் சேவையினின்றும் விடுவிக்க முடியுமா என்பதனை, சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் கூறுதல்வேண்டும்.

7. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டபிள்யூ. எல். பி. டி மெல்,
தொழில் ஆணையாளர்.

தொழிற் செயலகம்,
கொழும்பு 5,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 8 ந உ.

## விண்ணப்பப் பத்திரம்

**கட்டுவேலைப் போதனாசிரியர் பதவிகள்**

1. முழுப் பெயர் : ————.
(தெளிவான எழுத்துக்களில்)
2. விலாசம் : ————.
3. பிறந்த தேதி : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்.)
4. பிறந்த இடம் :
(அ) விண்ணப்பக்காரரினது : ————.
(ஆ) விண்ணப்பக்காரரின் தந்தையினது : ————.
5. எத்தேசத்தவர் ? :————.
6. மிக உயர்ந்த கல்வித் தகைமை : ————.
(தராதரப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
7. பின்வருவனவற்றில் போதிப்பதற்குத் தகுதியுடையவரா ?:————.
(அ) சிங்களம் : ————.
(ஆ) தமிழ் : ————.
(இ) ஆங்கிலம் : ————.
8. எத்தனை ஆண்டு கால அனுபவம் உண்டு ?:————.
(சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
9. குணச் சான்றிதழ்கள் வழங்கியவர்கள் :
(பிரதிகள் மாத்திரம் இணைக்கப்படுதல் வேண்டும்.)
1 :————.
2 : ————.
10. மற்றும் விபரங்கள் :————.
11. இவ்விண்ணப்பத்தில் நான் கூறியுள்ள விவரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதனகத்தேயுள்ள விவரங்களெவையாயினும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிந்தெடுக்கப்படுமுன்னர் காணப்படின், நான் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேனென்பதையும் நியமனத்தின் பின்னர் பிழை கண்டுபிடிக்கப்படின், நட்டஈடு யாதுமின்றி வேலை நீக்கத்திற்கு ஆளாவேனென்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பக்காரரின் ஒப்பம்.

தேதி :————.

10–600/1—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

---

## தொழிற் திணைக்களம்

**தச்சுத் தொழிற் போதனாசிரியர் பதவிகள்**

தொழிற் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தச்சுத்தொழிற் பயிற்சி நிலையங்களின் போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பஞ்செய்வோர், இதனடியிற் குறிக்கப்பட்டுள்ள மாதிரிப் பத்திரத்தைப் பார்த்தெழுதி, 1970 ம் ஆண்டு ஒத்தோபர் 31 ந் தேதியன்றோ அதற்குமுன்னரோ "தொழில் ஆணையாளர், தொழின் முறைப் பயிற்சிக்கிளை, 8 ம் மாடி, தொழிற் செயலகம், கொழும்பு 5" என்ற விலாசத்திற்குக் கிடைக்கும்வண்ணம் விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல்வேண்டும்.

1. **கட்டணம்.**—மாதமொன்றுக்கு சகல படிகளுமுட்பட ரூ. 400.00 முதல் ரூ. 450.00 வரை.

**குறிப்பு.**—தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்களின் தகைமைகள், அனுபவம், திறன் என்பவற்றை அனுசரித்தே கொடுக்கப்படவேண்டிய உண்மையான தொகை நிருணயிக்கப்படும்.

2. **நியமனத்திற்கான நிபந்தனைகள்.**—(அ) நியமனம், முதலாவதாக, தொழில் ஆணையாளர் தீர்மானிப்பதற்கிணங்க, ஓராண்டு கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் செய்யப்படும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் சேவை செய்யுமாறு வேண்டப்படுவர்.

(இ) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர் ஒவ்வொருவரும் பிணைப்பணமாக ரூ. 1,000 கட்டுதல்வேண்டும்.

3. **வயது வரையறை.**—25 வயதுக்கு உட்படாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்கள் விடயத்தில் மேல்வயது வரையறை இயைபுடையதன்று).

4. **தகைமைகள் :** (i) கல்வி பற்றியன—

(அ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திர அல்லது பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் தோற்றி ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது,

(ஆ) இவற்றிற்குச் சமமான அல்லது உயர்வான பரீட்சையில் சித்தி பெற்றிருப்பதோடு,

(ii) நுண்தொழில் பற்றியன—

(அ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் இறுதித் தராதரப் பத்திரத்தையுடையராயிருத்தல் வேண்டும். அல்லது,

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் சிறு மேற்பார்வையாளர் தராதரப் பத்திரத்தையுடையராயிருத்தல் வேண்டும். அல்லது,

(இ) இவற்றிற்குச் சமமான அல்லது உயர்வான தராதரப்பத்திரத்தை பெற்றபின், தச்சுத்தொழிலில் அல்லது மரவேலையில் ஐந்தாண்டு மேற்பார்வை அனுபவம் உடையராயிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**— இத்தொழிலில் (தொழிற்பயிற்சியாதாயினும் உட்பட) 15 ஆண்டு அனுபவமுடையராகி, 7 ம் வகுப்பிலாயினும் தேர்ச்சிபெற்ற எவரும் இப்பதவிகளுக்கு விண்ணப்பித்தற்குத் தகுதியுடையராவர்.

5. விண்ணப்பக்காரர்கள் யாவரும் தொழிற் சோதனையொன்றிற் சித்திபெற வேண்டியவர்களாவர்.

6. அரசாங்க சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் அந்தந்தத் திணைக்களத்தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்படுமிடத்து, அவர்களைச் சேவையினின்றும் விடுவிக்க முடியுமாவென்பதனை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் கூறுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டபிள்யூ. எல். பி. டி மெல்,
தொழில் ஆணையாளர்.

தொழிற் செயலகம்,
கொழும்பு 5., 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 8 ந உ.

## மேற்குறிப்பிட்டுள்ள விண்ணப்பப் பத்திரம்

**தச்சுத் தொழிற் போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பம்**

1. முழுப்பெயர்—(தெளிவான எழுத்துக்களில்) :————.
2. விலாசம் :————.
3. பிறந்த தேதி—(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்) :————.

4. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பக்காரரினது :————.
(ஆ) விண்ணப்பக்காரரின் தந்தையினது :————.

5. எத்தேசத்தவர் :————.

6. மிக உயர்ந்த கல்வித் தகைமை—(தராதரப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல்வேண்டும்) :————.

7. பின்வருவனவற்றிற் போதிப்பதற்குத் தகுதியுடையரா ?
(அ) சிங்களம் :————.
(ஆ) தமிழ் :————.
(இ) ஆங்கிலம் :————.

8. அனுபவம் (எத்தனை ஆண்டு காலம் ?) :————.
(சான்றிதழின் பிரதி இணைக்கப்படல்வேண்டும்)

9. குணச் சான்றிதழ்கள் வழங்கியவர்கள்—(பிரதிகள் மாத்திரம் இணைக்கப்படல் வேண்டும்) :—
(1) :————. (2) :————.

10. மற்றும் விவரங்கள் :————.

11. இவ்விண்ணப்பத்தில் நான் கூறியுள்ள விவரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதனகத்தேயுள்ள விவரங்களெவையாயினும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிந்தெடுக்கப்படு முன்னர் காணப்படின், நான் தகைமை நீக்கம் செய்யப்படுதற்கு ஆளாவேனென்பதனையும், நியமனத்தின் பின்னர் பிழையென்று கண்டுபிடிக்கப்படின், நட்டஈடு யாதுமின்றி வேலைநீக்கத்திற்கு ஆளாவேனென்பதனையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பக்காரரின் ஒப்பம்

தேதி :————.

10–600/2—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

---

## இலங்கைத் தரைப்படை

### பல் மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவிகள்

1. இலங்கை தரைப்படையில் பல் மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் கப்டன் பதவியில் நிரந்தர அரசாணை அமர்வு செய்யப்பட்டு இலங்கை இராணுவ வைத்தியப் படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

3. (அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் அவரவர்களின் தகுதிகளுக்கு இணங்க கீழ்க்காணும் வேதன அளவுத்திட்டத்தில் அமர்த்தப்படுவர்.

(i) தரம் II—வருடம் ரூபா 8,160 இல் இருந்து ரூபா 14,400 வரை. ரூபா 360 இல் ஆன எட்டு (8) ஆண்டேற்றங்களும், ரூபா 480 இல் ஆன ஏழு ஆண்டேற்றங்களும்.

(ii) தரம் I—வருடம் ரூபா 14,880 இல் இருந்து ரூபா 16,320 வரை. ரூபா 480 இல் ஆன மூன்று (3) ஆண்டேற்றங்களும்.

(ஆ) தரம் II ம், தரம் I னதும் சம்பள விகிதம் தொடர்ந்து கால எல்லைவரை வழங்கப்படும்.

(இ) கீழ்க்காணப்படும் சகாயப்பணமும் கொடுக்கப்படும் :—

(i) மாதம் ரூபா 180 ல் ஆன சேவைப்படியும்,

(ii) **பிரிந்திரிக்கைப்படி**

(1) தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு அதிகப்படாத கால வரையறைக்கு, வழமையான கடமைகளின் காரணமாக, பாசறையினுள் வசிக்கும்படி. மணமான அதிகாரிகளுக்கு கட்டளையிட்டிருந்தால், நாளொன்றுக்கு ரூபா 1.50.

(2) அவசர நிலைமைக்காகவோ அல்லது விசேட கடமைக்காகவோ தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு அதிகமான காலவரையறைக்கு பாசறையினுள் வசிக்கும்படி மணமான அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டிருந்தால், நாளொன்றுக்கு ரூபா 2/–.

(iii) பிரயாண அத்துடன் இணைந்த பணிக்கொடைகள் அரசாங்க அதிகாரிகளுக்குக் கொடுபடும் படியாகும்.

(iv) தகைமைப்படிகள், இலங்கை இராணுவ மருத்துவ, பல் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் போலாகும்.

(v) மணமான அதிகாரிகளின் படிகள், இணைந்த பணிக்கொடைகளுக்கு இணங்கவும்.

(vi) வேறு ஏனைய பணிக்கொடைகள் (தொடக்க அணியடுக்கு, கோலவுடை பேணல், சேவையாளர் பணிக்கொடைகள்) ஆதியன தரைப்படையின் வேதனச் சட்டக்கோவை பிரகாரம் வழங்கப்படும்.

(ஈ) இராணுவ மருத்துவ, பல்மருத்துவ உத்தியோகத்தர்களுக்குமான 1961 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் 25 ம் திகதியிடப்பட்ட 12,673 இலக்கத்தை உடைய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டதும் ஆன 1961 ஆம் ஆண்டில் இராணுவ மருத்துவ, பல்மருத்துவ உத்தியோகத்தர்கள் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கவும் ஆளப்படுவர். மற்றும் ஏனைய எல்லா தரைப்படை ஒழுங்குவிதிகள் அனைத்தும் பல்மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் பொருத்தமானதாகும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் 1934 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ம் திகதிய உபகாரச் சம்பள நிகழ்ச்சிக் குறிப்புகளுக்கு இணங்கவும், காலத்திற்குக் காலம் அரசாங்க வர்த்தமானியில் செய்யப்படும் திருத்தங்களுக்கு இணங்கவும், விண்ணப்பகாரர்கள் தேர்ந்தெடுக்கப்படின் அவர்கள் உபகாரச் சம்பளம் அல்லது பணிக்கொடை ஒன்றிற்கு உரித்துடையவராவார்கள். மற்றும் பதவி உயர்ச்சி விவரங்கள் கொழும்பு, தரைப்படைத் தலைமை நிலையத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

5. விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டும் :—

(அ) **தேசிய இனம்**—விண்ணப்பகாரர்கள் இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்.

(ஆ) **வயது**—விண்ணப்பகாரர்கள் 1970.11.5 திகதியன்று 35 வயதுக்குக் கூடாதவராயிருத்தல் வேண்டும்.

(இ) **கல்வித் தகைமையும் உயர்தொழிற் தகைமையும்**—விண்ணப்பகாரர்கள் எல்.டி.எஸ்., பி.டி.எஸ். அல்லது பிரசித்தி பெற்ற சர்வகலாசாலையின் அல்லது பரீட்சை சபையினால் பெற்ற அதற்குக் கூடிய பல்மருத்துவ கல்வித் தகைமை உடையவராயிருப்பதுடன் இலங்கை மருத்துவயவையில் மருத்துவ சத்திரவைத்தியராய்ப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
1970 ஆம் ஆண்டின் இறுதிப் பரீட்சைக்குத் தோன்றும் விண்ணப்பகாரரும் விண்ணப்பிக்கலாம்.

(ஈ) **வைத்தியத்தகைமைகள்**—விண்ணப்பகாரர்கள் தேர்தலுக்கு முன் இராணுவத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வைத்தியப் பரிசோதனைக்கு உள்ளாகி அதில் சித்தியடைதல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் போன்று எழுதப்பட்டு 1970.11.5 திகதியன்றுக்குப் பிந்தாமல் தரைப்படைத் தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரியில் கிடைக்க அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையில் “ விண்ணப்பங்கள்—பல் மருத்துவ உத்தியோகத்தர்கள் ” என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

7. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்கள் தம் விண்ணப்பங்களை சுகாதார சேவைத் தலைவருக்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விண்ணப்பகாரர்கள் தெரிவு செய்யப்படின் அவர்களைச் சேவையில் இருந்து விடுவிக்கப்படும் என்ற சான்றிதழ் ஒன்றும் இணைத்தனுப்புதல்வேண்டும். இவ்விண்ணப்பகாரர்கள் சேர்த்துக்கொள்ளப்படின் அவர்களின் அரசாங்க பணிக்கொடைச் சேவைகள் தரைப்படை பணிக்கொடைச் சேவைகளுக்குச் சேர்த்துக்கொள்ள இச்சான்றிதழ் அனுப்பி வைக்கப்படாவிடின் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.

8. விண்ணப்பங்களுடன் இவற்றின் பிரதிகள் இணைத்தனுப்புதல் வேண்டும். :—

(அ) பிறப்புச் சான்றுப் பதிவுப் பத்திரம் ;

(ஆ) கல்வித் தகைமைகளையும்/உயர்தொழில் தகைமைகளையும் நிரூபிக்கும் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரர்களுடன் பரீச்சயமுடைய பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட குறைந்தபட்சம் இரு நற்சான்றுப் பத்திரங்கள்.

9. மேலே கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களிலிருந்து தொடக்கத் தெரிவு இராணுவ தேர்வுச் சபையொன்றினால் தெரிவு செய்யப்படும். இதன்பின் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர்களில் இருந்து இறுதித் தெரிவு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படும். நேர்முகப்பரீட்சைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர்களுக்கு அத்தகைய நேர்முகப்பரீட்சைகளின் இடம், நேரம், திகதி

என்பன எழுத்துமூலம் அறிவிக்கப்படும். நேர்முகப்பரீட்சைகள் யாவும் கொழும்பில் நடாத்தப்படும். இத்தொடர்பில் ஏற்படும் எவ்வித பிரயாணச் செலவுகளோ அல்லது பிற செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் கொடுக்கப்படமாட்டாது.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கென விசேடமாக அரசாங்க மொழியதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

11. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் தமது அடிப்படைச் சம்பளத்தின் 4 விகிதமானதைத் தமது உதவு தொகையாக படைக்கலந் தாங்கு சேவைகளின் விதவை அநாதை உபகாரச் சம்பள நிதிக்கு வழங்குவதற்கு எழுத்துமூலம் தமது சம்மதத்தைக் கொடுத்தல் வேண்டும்.

12. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவை செய்வதற்கு வேண்டப்படின், அவர்கள் அதற்கு இணங்கியவர்களாதல் வேண்டும்.

13. விண்ணப்பங்கள் யாவும் கீழ்க்காணப்படும் படிவத்தினைப் போன்றதாயிருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
தரைப்படைத் தளபதிக்காக.

திகதி : 1970, ஒக்டோபர் 9.

**இலங்கை தரைப்படையில் பல்மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) : ———.
2. தேசிய இனம் : (பரம்பரையான இலங்கைப் பிரசையா அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுக. பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக) : ———.
3. முகவரி : வீட்டு விலாசம் : ———.
அலுவலக விலாசம் : ———.
4. பிறந்த திகதி : 1970.11.5 திகதியன்று : ———.
வருடம் : ——— மாதம் : ———. நாள் : ———.
5. பிறந்த இடத்தின் பெயரும் தற்போதைய முகவரியையும் குறிப்பிடுக : ———.

| | முழுப் பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

6. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? : ———.
7. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுகளில் நீர் பெற்ற தனிச் சிறப்புகள் : ———.
8. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் : ———.
9. படைக்கலந் தாங்கு சேவைகளில், இலங்கை தொண்டர் படை, மாணாக்கர் சிறப்பணி, அல்லது சாரணர் படை ஆகிய நிறுவகங்களில் சேவை செய்திருப்பின் அவற்றின் விபரம் : ———.
10. இந்நியமனம் சம்பந்தமாக உமக்குள்ள வேறு விசேட தகைமைகள் இருப்பின் அவற்றைக் குறிப்பிடுக : ———.
11. இதற்குமுன் படைக்கலந்தாங்கு சேவைகளின் ஏதாவது ஒன்றிற்கு விண்ணப்பித்திருப்பின் அதன் முடிவு : ———.
12. கீழ்க்காணும் பாடசாலை அல்லது சர்வகலாசாலை விபரங்களைத் தருக : ———.
பாடசாலையின் அல்லது சர்வகலாசாலையின் பெயர் : ———.
சேர்ந்த திகதி : ———.
விலகிய திகதி : ———.
பொது/உயர்தொழில் கல்வி சித்தியடைந்துள்ள பரீட்சைகள் : ———.
13. பாடசாலையை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய பின் நீர் செய்த தொழில் விபரங்களைத் தருக : ———.
வேலை கொள்வோரின் பெயர் : ———.
செய்த தொழில் : ———.
சேவை செய்த காலம் : தொடக்கம் : ———.
வரை : ———.
14. நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும் முகவரியும் : ———.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதி கூறுகிறேன்.

———.
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி : ———.

10–547—16.10.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,928

## இலங்கை அரச கடற்படை

### முகாரிப் பதவி (மோட்டார்ப்போக்குவரத்து)

இலங்கை அரச கடற்படையில் முகாரிப் பதவி (மோட்டார்ப் போக்குவரத்து) ஒன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 5304—144 × 9— 180 × 8–8040. வினைத்திறமைகாண் தடையொன்று ரூபா 6600க்கு முன் உண்டு.

3. **வேண்டப்படும் கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் தான் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ளார் என்பதற்குச் சான்று அளித்தல் வேண்டும் :—

(அ) (i) கணிதமும் பௌதிகமும் சித்திபெற்ற சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் சிங்களம்/தமிழ்ப்பாஷை/கணிதம், பௌதிகம் ஆகியவற்றுடன் வேறு ஏதாவது மூன்று பாடங்களில் சித்திபெற்ற கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பத்திரம்.

சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் வழங்கப்பட்ட பரீட்சையில் கணிதத்திலும் பௌதிகத்திலும் சித்தி அடையப்பெறுதிருப்பின் எந்தப் பிறவொரு தடவை அல்லது கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர) பத்திரப்பரீட்சையிலோ, இப்பாடங்களிற் பெறப்பட்ட சித்தி ஏற்றுக்கொள்ளப்படும்.

(ii) நன்கு மதிக்கப் பெற்ற நிறுவனமொன்றில் அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றில் மோட்டார்ப் போக்குவரத்துச் சம்பந்தமான அலுவலங்களில் ஐந்து வருடம் பூர்த்தி செய்த தொழிற்பயிற்சி.

(iii) பெற்றோல், டீசல் இயக்கும் மோட்டார் இயந்திரங்களைப் பழுது பார்த்தலிலும் பேணுதலிலும் செய்கைமுறை வேலையில் 8 வருட அனுபவம் இருப்பதோடு அவற்றை மேற்பார்வை செய்யும் வகையில் குறைந்தது 3 வருட அனுபவமும் இருத்தல் வேண்டும்.

(iv) பெரிய மோட்டார் இயந்திர நிறுவனமொன்றில் நவீன சாதனங்களையும் இயந்திரம் பழுதுபார்க்கும் நிறுவன உபபிரிவுகள் எல்லாவற்றையும் இயக்குவதிலும் நல்ல அனுபவம் இருத்தல்வேண்டும்.

அல்லது

மேற்கூறப்பட்டிருப்பதோ அல்லது பின்வருவனவோ இருத்தல் வேண்டும் :—

(ஆ) (i) கணிதம், பௌதிகம் அல்லது பொது விஞ்ஞானத்துடன் கனிட்ட தராதரப் பத்திரம் அல்லது ஆரம்ப பாடசாலை விடுகைச் சான்றிதழ் அல்லது கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையில் பெறப்பட்ட கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிலான ஒரு சித்தி அல்லது கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையில் பெறப்பட்ட எட்டாம் தரத்தில் அல்லது கனிட்ட பாடசாலைத் தராதர வகுப்பிலான ஒரு சித்தி.

10-614—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

## மகாவலி அபிவிருத்திச் சபை

### எந்திரிப்பதவி

மகாவலி அபிவிருத்திச் சபைச் சேவையில் பின்வரும் பதவிகளுக்கு இலங்கைப் பிரசைகளாயுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்கள் மேலே தரப்படும் படிவமுறையில் அமைந்தியன்றனவாகி பின்வரும் தேதியன்றோ, முன்போ தலைவர்க்குக் கிடைக்கக்கூடியதாக, தலைவர், மகாவலி அபிவிருத்திச் சபை, அ. பெ. 1667, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறன்றிச் சேவையிலுள்ள எந்த உத்தியோகத்தரிடமேனும் விண்ணப்பத்தை நேரிற் கொடுக்கலாகாது.

(அ) உள்ளூர் விண்ணப்பம் : 30.10.70.
(ஆ) வெளிநாட்டு விண்ணப்பம் : 7.11.70.

**(1) 1 உதவிப் பொது முகாமையாளர் பதவி**—எந்திரவியற் பகுதி :

**வேதன அளவு :** மாதமொன்றுக்கு (சகலதும் உட்பட) ரூபா 1,800—50—ரூபா 2,000.

(i) **வயது எல்லை :** 50 ஆண்டுக்கு மேற்படலாகாது.
(ii) **தகைமைகள் :**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் சிவில் எந்திரவியற் பட்டமும், அங்கீகரிக்கப்பட்ட உயர்தொழில் நிறுவனமொன்றில் இணையுறுப்பு நிலையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) அத்துடன், சிவில் எந்திரவியல் செய்திட்டத் துறையின் வடிவமைப்புக் கட்டுமான வேலையிற் குறைந்தது 5 ஆண்டு அனுபவமும், கண்காணிப்பு எந்திரிப்பதவி நிலையில் குறைந்தது 3 ஆண்டு அனுபவமும் கொண்டு இயல்வதாகி, தகைமை பெற்ற எந்திரியாம் வகையில் 15 ஆண்டுக்குக் குறையாத அனுபவம் உடையராதல் வேண்டும்.

**(2) பிரதான எந்திரிப் பதவிகள் :**

**வேதன அளவு :** மாதமொன்றுக்கு (சகலதும் உட்பட) ரூபா 1,750—50—ரூபா 1,950.

(i) **வயது எல்லை :** 50 ஆண்டுக்கு மேற்படலாகாது.
(ii) **தகைமைகள் :**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் சிவில் எந்திரவியற்பட்டமும் அங்கீகரிக்கப்பட்ட உயர்தொழில் நிறுவனமொன்றில் இணையுறுப்பு நிலையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) அத்துடன், நிறைவேற்று நிலையில் குறைந்தது 5 ஆண்டு அனுபவம் கொண்டியல்வதாகி, தகைமை பெற்ற எந்திரியாக 10 ஆண்டுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**(3) எந்திரிப்பதவி தரம் I (சிவில், பொறிமுறை, மின்முறை) :**

**வேதன அளவு :** மாதமொன்றுக்கு (சகலதும் உட்பட) ரூபா 1,600—50—ரூபா 1,800.

(i) **வயது எல்லை :** 50 ஆண்டுக்கு மேற்படலாகாது.
(ii) **தகைமைகள் :**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் எந்திரவியற் பட்டமோ, அங்கீகரிக்கப்பட்ட உயர்தொழில் எந்திரவியல் நிறுவனமொன்றின் இணையுறுப்பு நிலையோ அல்லது இரண்டும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) எந்திரவியல் கட்டுவேலையின் வடிவமைப்பிலோ, கட்டுமானத்திலோ அன்றேல் இரண்டிலும் 5 ஆண்டுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**(4) எந்திரிப்பதவிகள் தரம் II (சிவில், பொறிமுறை, மின்முறை) :**

**வேதன அளவு :** மாதமொன்றுக்கு (சகலதும் உட்பட) ரூபா 1,200—50—ரூபா 1,600.

(i) **வயது எல்லை :** 50 ஆண்டுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.
(ii) **தகைமைகள் :**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் எந்திரவியற்பட்டமோ, உயர்தொழில் எந்திரவியல் நிறுவனமொன்றின் இணையுறுப்பு நிலையோ அன்றேல் இரண்டும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) எந்திரவியல் கட்டுவேலையின் வடிவமைப்பிலோ கட்டுமானத்திலோ அன்றேல் இரண்டிலுமோ அல்லது மின்முறை பொறிமுறைப் பொறித் தொகுதி வடிவமைப்பு, தாபிப்பு, பேணல் ஆகியவற்றில் 3 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**(5) எந்திரிப்பதவிகள் தரம் III (சிவில், பொறிமுறை, மின்முறை) :**

**வேதன அளவு :** மாதம் ஒன்றுக்கு (சகலதும் உட்பட) ரூபா 800—40—ரூபா 1,120.

(i) **தகைமைகள் :** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் எந்திரவியற்பட்டம் அல்லது அதற்குச் சமமான உயர்தொழில் தகைமைகள்.

**நியமன ஒப்பந்த நியதிகள்**

(i) ஈராண்டு காலச் சேவை ஒப்பந்தத்தின் பேரில் நியமனம் இடம் பெறும். தொடர்ந்து ஈராண்டு கால அளவெல்லைகளில் சேவை நீட்டச் சாத்திய நிலையுண்டு.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள், சபைப் பணிசெய்யுநர்க்காகவுள்ள ஏற்பாட்டு நிதியத்திற்கு உதவுதொகை கட்டவேண்டும்.

(iii) தெரிந்தெடுக்கப்படுவோர் 6 மாத காலப்பரீட்சார்த்த நிலையில் வைக்கப்படுவர் ; அத்துடன் அரசகரும மொழித் திணைக்கள மொழி விதிகளுக்கும் அமைவுடையவராவர்.

(iv) நியமிக்கப் பெறுவோர், கடமையேற்பதன் முன்னர் அரசாங்க மருத்துவ நிறுவகமொன்றில், மருத்துவப்பரீட்சைக்குள்ளாதல் வேண்டும்.

———

தலைவர்,
மகாவலி அபிவிருத்திச் சபை.

கொழும்பு.

### மகாவலி அபிவிருத்திச் சபை

**விண்ணப்பப் படிவம்**

விண்ணப்பப் பதவி : ......................
பெயர் : ————.
முகவரி : ————.
வயது : ————.
குடியியல் நிலை : ————. விவாகம் ஆனவர்/ஆகாதவர் :———
இப்போதைய பணிநிலை :————. சகலதும் உட்பட வேதனம் : ———
தகைமைகள் (கல்வி, உயர்தொழில்) : ————.
(சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்படல் வேண்டும்)
சிங்களத்தில் தேர்ச்சி நிலை : ————.
விசேட உளச்சார்புகள் : ————.
சான்றிதழ்கள் வழங்குவோரின் பெயர், முகவரி : ————.

————,
விண்ணப்பக்காரர் ஒப்பம்.

**குறிப்பு :** 1. சான்றிதழ்களுள் ஒன்றேனும் தற்போதைய பணிகொள்வோரினதாதல் வேண்டும். அரசாங்கத்துறைச் சேவையிலுள்ளோரது விண்ணப்பங்கள் திணைக்களத்தலைவர் அல்லது, யாக்கத் தலைவர்/பொது முகாமையாளர் மூலம் முறையே மேலொப்பம் பெற்று அனுப்பப்படல் வேண்டும்.

2. விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்பட வேண்டுமேல் சொந்த முகவரியிட்ட அஞ்சல் அட்டை விண்ணப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. விளம்பரப்படுத்தப்படாத பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

10–579—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 15,928.

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### 1970 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் நடைபெற்ற நொத்தாரிசு கடைசிப் பரீட்சை

இதன்கீழே காணப்படும் பெயருடைய அபேட்சகர், அவரின் பெயருக்கு முன்னே கொடுக்கப்பட்டிருக்கும் மொழியில் தொழில் நடத்த நொத்தாரிசு கடைசிப் பரீட்சையில் சித்தியடைத்திருகிருர் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது :

எச். பி. பி. பண்டா .. சிங்களம்

பீ. மகாதேவா,
பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 13 ந் வ.

10–515—16.10.70. ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

## நில அளவைத் திணைக்களம

### அளவையியற் படமிடல் நிறுவனம்—தியத்தலாவை

**ஐக்கியநாடுகள் சபையின் ஒரு சிறப்பு நிதியுதவி அபிவிருத்தித் திட்டம் 1971 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பமாகும் கல்வியாண்டு**

தியத்தலாவையிலுள்ள அளவையியற் படமிடல் நிறுவனத்தில் ஒரு வருடந் தங்கியிருந்து பயிற்சி பெறப் பிரவேசித்தற்கான விண்ணப்பங்கள் பின்வரும் அலுவலகங்களில் 1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம், பயிற்சி நிறுவனக் கிளை, கிருல வீதி, நாரகன்பிட்டி; யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம், பொலநறுவை, திரிகோணமலை, குருநாகல், புத்தளம், கண்டி, பதுளை, மட்டக்களப்பு, இரத்தினபுரி அல்லது காலி முதலிய இடங்களிலுள்ள பெரும்பாக நில அளவை அலுவலகங்கள்; இணை முகாமையாளர், அளவையியற் படமிடல் நிறுவனம், தியத்தலாவை.

விண்ணப்பங்கள் மேற்குறிப்பிட்ட அலுவலகங்களிலிருந்து பெற்ற படிவங்களில் அனுப்பவேண்டும். பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில், ஒரு ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டி அதன்மேல் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும். குறைபாடுகள் யாதேனும் உள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால், தியத்தலாவையிலுள்ள அளவையியற் படமிடல் நிறுவனத்தின் இணை முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அரசாங்க சேவையில் அல்லது முடிக்குரிய கூட்டுத்தாபனங்களில் சேவையில் உள்ள விண்ணப்பகாரர், கீழே 2 ம் பந்தியில் விவரிக்கப்பட்ட தகைமைகளிருப்பின் முறையே தமது திணைக்கள அதிபதி அல்லது கூட்டுத்தாபன சபைத்தலைவருக்கு ஊடாக விண்ணபிக்க வேண்டும். பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், ஓர் ஆண்டு முழுச்சம்பளப் படிப்பு விடுதலை கிடைக்குமென்று மேற்கூறிய தலைவர்களின் சான்றறிழை விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும்.

2. **தகவுத்திறன்.**—இப்பயிற்சிக்கு விண்ணப்பிப்போர்,

(அ) இலங்கையராயிருக்கவேண்டும்; அஃதாவது பரம்பரையாக அல்லது பதிவால் இலங்கைப் பிரசையாக இருத்தல்வேண்டும்.

(ஆ) பின்வரும் கல்வித் தகைமைகள் உடையவராயிருத்தல் வேண்டும் :—

(1) (அ) தூயகணிதத்தில் திறமைச் சித்தியும், பௌதிகவியலில் சித்தியையும் கொண்ட சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்

அல்லது

(ஆ) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண)ப் பரீட்சையில் இரண்டு முறைக்குக் கூடாத எத்தனிப்பில் பெற்ற கீழ்க்காணும் பாடங்களடங்கிய 6 பாடங்கள் :

(1) ஆங்கிலத்தில், சிங்களம் அல்லது தமிழில் சித்தி

(2) தூயகணிதத்தில் திறமைச் சித்தி

(3) பௌதிகவியலில் சித்தி

(4) மற்றைய 3 பாடங்களில் சித்தி.

(2) (அ) கட்டுபெத்தையிலுள்ள செய்முறைத் தொழில் நுட்பவியல் பயிற்சி நிறுவனத்தில் அல்லது ஒரு கனிட்ட தொழில் நுட்பக் கல்லூரியில் அல்லது ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் அளவைப் பயிற்சிப் பாடசாலையில் அளவையியலிலும்—மட்டம் பார்த்தலிலும் ஒரு வருட முழு நேரப் பயிற்சி பயின்று முடித்தற்கான சான்றிதழ் ;

அல்லது

(ஆ) இவற்றுக்குச் சமமான தொழில் நுட்பத் தகைமைகள்.

3. **தகவுத்திறனுக்குரிய ஆவணங்கள்.**— பின்வரும் ஆவணங்கள் (மூலப்பிரதி) 4 ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட எழுத்துப் பரீட்சைக்குமுன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(அ) 2(ஆ)—(2) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட பயிற்சி நிறுவனத்தின் அதிபரால் கைச்சாத்திட்ட நன்னடைத்தைச் சான்றிதழ்.

(ஆ) விண்ணப்பக்காரரின் உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புப் பதிவுப் பத்திரம்.

(இ) இலங்கைப் பிரசையாகப் பதிவு பெற்றதற்குரிய சான்றிதழ் அல்லது பிரசா உரிமைக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அரசாங்கக் கடிதத்தின் மூலப்பிரதி (தேவைக்கேற்றபடி).

(ஈ) 2(ஆ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகளுக்குரிய சான்றிதழ். மூலச் சான்றிதழ்கள் இன்னும் கைக்கெட்டாவிடில் பயிற்சிக் கல்லூரி அதிபரிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. **பிரவேசம்.**—தேவையான தகைமைகளை உடையவர்கள், தூய கணிதம், பௌதிகவியல், பொது அறிவு, நுண்ணறிவு, அளவையியல் மட்டம் பார்த்தல், படம்வரைவியல் ஆகிய பாடங்களில் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றும்படி வேண்டப்படுவர்.

பரீட்சையின் இடம், திகதி, நேரம் முதலியன தகுதியுடைய விண்ணப்பகாரர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும். இதன்பின்பு தகுதியான மாணுக்கர்களை நேர்முகப் பரீட்சையிட்டு, இறுதித் தெரிவு செய்யப்படும்.

பயிற்சிக்கான பிரவேசம், மேலும் அரசாங்க மருத்துவ அதிகாரியால் குறிப்பிடப்பட்ட மருத்துவ பரிசோதனையைச் சித்தியடைவதில் தங்கியுள்ளது. பயிற்சி ஆரம்பமாகுமுன் மருத்துவ பரிசோதனையின் முடிவை தியத்தலாவையிலுள்ள அளவையிற் படமிடல் நிறுவனத்தின் இணை முகாமையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

அறிவுறுத்தல்களை நன்றாகப் படிக்காத அல்லது விளங்கும் திறனற்ற மாணுக்கர்களுக்கு முன்னெச்சரிக்கை செய்து நிறுத்தப்படும். பிரவேசம் அல்லது நிறுத்தல் சம்பந்தமாக, நில அளவையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானதாகும்.

5. **கல்வி பயிற்றும் மொழி.**— விரிவுரைகள் ஆங்கிலத்தில் நடைபெறும். சிங்கள/தமிழ் கைக்குறிப்புகள் கேட்கப்பட்டால், விரிவுரைக்கு முன் கிடைக்கக்கூடியதாயிருக்கும்.

6. **விடுதிவசதி.**—மாணவர்களுக்கு, பிரமச்சாரிகளுக்கான விடுதி வசதி (இரண்டு அல்லது மூன்று அத்தியாவசிய தளபாடங்களுடன்) இலவசமாக அளிக்கப்படும். அத்துடன் அவர்கள் வசதிக்கான ஒரு பொதுச் சமையலறையும் ஒதுக்கப்படும்.

7. **செலவும் கட்டுப்பணங்களும்.**—பயிற்சிச் செலவோ, நூல் நிலையக் கட்டணமோ அறவிடப்படமாட்டாது. பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டோர் அழிவு சேதங்களுக்குக் காப்பீடாக வைப்புப்பணம் ரூபா 30 கட்டவேண்டும். இவ்வைப்புப் பணம் பயிற்சிக்காலம் முடிவுற்றதும் திருப்பிக் கொடுக்கப்படும்.

8. **தகுதித் தேர்வுப்பட்டம்.**—இப்பயிற்சி ஒரு உயர்தர தொழில் நுட்ப வல்லுநரின் தகைமை எல்லைக்கு நடாத்தப்படும். சித்தியெய்தும் பயிற்சியாளர்களுக்கு அளவையியலில் தகுதித் தேர்வுப் பத்திரம் வழங்கப்படும்.

**இத்தகுதித் தேர்வுப்பத்திரம், திணைக்களத்தில் உத்தியோகம் பெற்றுத் தரும் என்ற உத்தரவாதத்தை தருவதாகக் கருதக்கூடாது**

எனினும் அரசாங்கப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுக்கமைய, நில அளவைத் திணைக்களத்தில் ஏற்படும் உத்தியோக வெற்றிடங்களை நிரப்பும் போது இப்பயிற்சி நிறுவனத்தின் தகுதித் தேர்வுப் பத்திரம் உடையவர்களே தெரிவு செய்யப்படுவர். தகுதித்தேர்வுப் பத்திரம் பெற்றவர்கள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட திருப்திகரமான தொழிற்பயிற்சி பெற்றிருந்தால், நில அளவையாளர் நாயகம் மேலதிகப் பரீட்சைகளெதுவுமின்றி தம் உசிதப்படி அளவையியலிலும் மட்டம் பார்த்தலிலும் உதவிப் பத்திரம் வழங்குவார்.

செ. வன்னியசிங்கம்,
பதில் நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
பயிற்சி நிறுவனக் கிளை,
த. பெ. இல. 506,
கொழும்பு 5,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 9 ந உ.

10–581—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

**வர்த்தகவியற் தராதரப் பத்திரப் பரீட்சை சிங்களம்/தமிழ்—1970**

மேற்படி பரீட்சை 1970 டிசெம்பர் 19 ந் தேதி ஆரம்பமாகும். விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 1970 நொவெம்பர் 5 ஆம் திகதியாகும்.

அச்சிடப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களையும், பிரமாணப் பிரதிகளையும் 1970 நொவெம்பர் 2 ஆம் திகதி வரை தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் பத்திரங்களைக் கேட்டு எழுதும் பொழுது சொந்த முகவரி எழுதப்பட்டதும், (முத்திரை ஒட்டப்படாதது) இடதுபக்க மேல் மூலையில் "எஸ் 13/ரீ" என எழுதப்பட்டதும் $9\frac{1}{2}'' \times 4\frac{1}{2}''$ அளவுகளை உடையதுமான தபாலுறைகள் அனுப்பப்படல் வேண்டும். இவ்வண்ணம் தபாலுறையொன்று அனுப்பப்படாவிடின் விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பிவைக்கப்பட மாட்டா.

விண்ணப்பப் பத்திரங்களை 26.10.1970 ல் இருந்து 4.11.1970 வரை நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

கே. ரீ. டபிள்யூ. சுமணசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
கொழும்பு 2,
அக்டோபர் 8, 1970.

10–598—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

*கொழும்பு—5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1970 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதி மு. ப. 10.00 மணி வரை, டீசல் என்ஜின்களோடுகூடிய ஓம்னிபஸ் 'சசி' களை வினியோகிப்பதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை உற்பத்தியாளர்களிடமிருந்தும் முதல்வர்களிடமிருந்தும் ('பிரின்சிப்பல்ஸ்') ஏற்றுக்கொள்ளுவார்.*

*மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*பதில் பிரதம வினியோக
உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.*

*வெரகெரை,
பொரலஸ்கமுவை,
25 செப்டெம்பர், 1970.*

*10-537—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928.*

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

*கொழும்பு 5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் கந்தக அமிலம் ("சல்பூரிக் அசிட்") வழங்குவதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை 1970 ஆம் ஆண்டு டிசெம்பர் 16 ஆம் தேதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளுவார்.*

*1970 ஆம் ஆண்டு டிசெம்பர் 15 ஆம் தேதி செவ்வாய்க் கிழமை பி. ப. 3.00 மணிவரை எனது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடியதான பத்திரங்களில் கேள்விப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு இரட்டைப் பிரதிகள் அனுப்பப்படவேண்டும். கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100/- ஐ பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் காசாகக் கட்டி, இதற்கான பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்காக எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.*

*மேலதிக விபரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*பதில் பிரதம வினியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.*

*வெரகெரை,
பொரலஸ்கமுவை,
4, அக்டோபர், 1970.*

*10-584—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928.*

---

## தேசிய பாற்சபை

**கப்பற் சரக்கை எடுத்தலும் அனுப்புதலுக்குமான கேள்விப் பத்திரம்–1971**

1971 சனவரி 1 ம் திகதியில் இருந்து 1971 டிசம்பர் 31 ம் திகதி வரையிலான காலத்திற்குத் துறையில் இருந்து கப்பற்சரக்கை எடுத்தல், அனுப்புதல் ஆகியவற்றிற்குக் கீழே கையொப்பமிட்டவரால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரதாரர் அரசாங்க திணைக்களத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் கப்பற்சரக்கை எடுத்தலிலும் அனுப்புதலிலும் குறைந்தது 5 வருட அனுபவம் கொண்டவராக இருக்க வேண்டும்.

**முடிவு திகதி.**—1970 நவம்பர் 4 ம் திகதி 2 மணி பிற்பகல்.

**கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவங்கள் கொடுக்கும் கடைசித் திகதி :** 1970 நவம்பர் 3 ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி.

கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவங்களை நாரஹென்பிற்றவில் உள்ள பால் பதனிடும் தொழிற்சாலை தேசிய பாற்சபையின் வழங்கு பொருள் முகாமையாளரிடம் இருந்து மீளப்பெறக்கூடிய கட்டுப்பணம் ரூபா 250 ம் மீளப்பெறமுடியாத கேள்விப்பத்திரக் கட்டணப் பணமாக ரூபா 25 ம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
பாற்சபை.

பாற்சபைத் தலைமைக் காரியாலயம்,
33, எலிபாங் தெரு,
கொழும்பு 5,

10–587—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

---

## *நீர்ப்பாசனத் திணைக்களம்*

*குருநாகல் தொகுதி ஹக்வட்டுண ஓயாத் திட்டத்தில் தளபாடச் சாமான்கள் பரிவர்த்தனை செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 10 ம் திகதி காலை 10 மணிவரைக்கும் வடமேல் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*2. நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 15,000/- அல்லது மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர், கூட்டுறவுச் சமாசங்கள், சமூக சேவா சங்கங்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். ஹக்வட்டுண ஓயா நிக்கவெரட்டியா/குருநாகல், நீர்ப்பாசனப் பொறியியலாளர் காரியாலயத்தில் பெறக்கூடிய நகல்களில் கேள்விப்பத்திர இருபிரதிகள் கொடுக்கப்படவேண்டும். கொழும்பு தவிர்ந்த ஏனைய கச்சேரிகளிலோ, நீர்ப்பாசன அதிபர் காரியாலயத்திலோ அன்றி ஹக்வட்டுண ஓயா/நிக்கவெரட்டியா/குருநாகல், பொறியியலாளர் காரியாலயத்திலோ ரூபா 25/- கட்டுப்பணமாக கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைக் கொடுத்து கேள்விப்பத்திர நகல்கள், 1970 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 5 ம் திகதி மாலை 1.00 மணி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம்.*

*3. குருநாகல், வடமேல் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் மேற்படி பெரும்பாக பொறியியலாளரால் கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 10 ம் திகதி காலை 10 மணிக்கு திறக்கப்பட்டு கேள்விப்பத்திரகாரர் அனுமதிக்கப்படுவர்.*

*4. மேலதிக விளம்பரங்கள் ஹக்வட்டுண ஓயாத் திட்ட பொறியியலாளரின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*

*செ. அப்பாத்துரை,
உப-பிரிவு ஆபிசர்,
ஹக்வட்டுண ஓயாத் திட்டம்.*

*மகுல்பொத்த,
5.10.1970.*

*10-522—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928.*

## இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம்

**துறைமுகத்திலிருந்து, கூட்டுத்தாபனங்களின் ஸ்தாபனங்களுக்கு, சரக்குகளை பொறுப்பேற்றலும் ஒப்படைத்தலுக்குமான கேள்விப் பத்திரங்கள்**

ஒரு வருட காலத்தின் போது துறைமுகத்திலிருந்து கூட்டுத்தாபனத்தின் ஸ்தாபனங்களுக்கு சரக்குகளை பொறுப்பேற்றலுக்கும் ஒப்படைத்தலுக்குமான முத்திரிக்கை வைத்த கேள்வி பத்திரங்கள் 1970 அக்டோபர் 30 ம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபன தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும். சுங்கப் பகுதிகளுடனும் துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனத்துடனும் " கஸ்டம்ஸ் ஹவுஸ் ஏஜண்டுகளாக " தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளவர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் கேள்விப்பத்திரங்களே ஏற்றுக் கொள்ளப்படும். இக்கேள்விப் பத்திரம் சம்பந்தமான கேள்விப் பத்திர பாரத்தில் இது சம்பந்தப்பட்ட சேவைகள் சம்பந்தமான விபரங்கள் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

திரும்பப் பெறும் ரொக்க டிப்போஷிட்டாக ரூபா 500 ம் திரும்பச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர கட்டணமாக ரூபா 10 ம் இந்தக் கந்தோரில் செலுத்துவதின் மீது விநியோக அதிகாரியிடம் இருந்து (வெளிநாடு) கேள்விப் பத்திர பாரங்களையும் விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம்,

த. பெ. எண் 1148,
420, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 7.

10-431—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928.

---

## தபாற் தந்திப் பகுதி

### பொருட்களை ஏற்றியிறக்கல்

கீழ் கொடுக்கப்பட்டுள்ள இடங்களிலிருந்து பொருட்களை ஏற்றியிறக்கலுக்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 1, தபாற் தந்திப் போக்குவரத்து தலைமைக் கந்தோர்க் கட்டடத்திலுள்ள பெரும்பாகக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1970 ஒக்டோபர் 31 ம் திகதி மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) அரசாங்கக் களஞ்சியத்திணைக்களத்திலிருந்து மருதானை தபாற் தந்திக் களஞ்சியத்திற்கு.

(ii) புகையிரத, சுங்கப்பகுதி, தபாற் தந்திக் களஞ்சியங்களிலிருந்தும் மீண்டும் அவ்விடங்களுக்கும்.

(iii) கொழும்புக்குள்ளும் கொழும்பைச் சுற்றி 15 மைல்கள் உள்ளடக்கியும்.

(iv) திணைக்கள அலுவலகங்கள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு மாறுதலாகிச் செல்லும் பொழுது பொருட்களை ஏற்றியிறக்குவதற்கு.

2. கேள்விப்பத்திரங்கள் 1970 ஒக்டோபர் 31 ம் திகதி மு. ப. 10.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது விண்ணப்பதாரர்கள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

3. கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 5, நாராஹேன்பிட்டி, கிருல வீதியிலுள்ள தபாற் தந்திப் பேக்குவரத்துத் திணைக்களத்தின் உபகரண, கட்டட, நலன்புரி, களஞ்சியக்கிளை, உதவி அத்தியட்சகரினது அலுவலகத்தில் பெற்ற பத்திரங்களில் அனுப்பப்படல் வேண்டும். கூறு விலை, பொருள்கள் ஒரு தொன் ஒரு மைலுக்கு என்ற அடிப்படையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. கொழும்பு 1, பி. த. க. விசாரணைகள் செய்யும் கருமபீடத்தில் கேள்விப்பத்திரப் பொறுப்புப்பணமாக ரூபா 50 கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்களுக்கே கேள்விப் பத்திர சாதனங்கள் 1970 ஒக்டோபர் 16 ம் திகதி தொடக்கம் 1970 ஒக்டோபர் 30 ம் திகதி பி. ப. 4.30 மணிவரை வழங்கப்படும்.

எம். பீ. த சில்வா,
உதவி அஞ்சல் அதிபர் நாயகம்,
(அஞ்சல் சேவை).

த. த. த. அலுவலகம்,
கொழும்பு 1.

10-603—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

---

## *ரப்பரை லொறிகளில் ஏற்றிச் செல்வதற்கான கேள்விகள்*

*1.11.70 தொடக்கம் 30.9.71 வரையுள்ள காலத்தில், 346 ஆம் இலக்கத்தில் பேர்குசன் ரோட்டு, மட்டக்குளியிலுள்ள அரசினர் மத்திய ரப்பர் பண்டகசாலையிலிருந்து, கொழும்பு சாமான் துறைக்கு சிற் றப்பர் கட்டுக்களை லொறிமூலம் ஏற்றி செல்வதற்கான கேள்விகள், பதிவு செய்யப்பட்ட போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொருட் கொள்வனவு ஆணையாளர், தபாற் பெட்டி இல. 147, கொழும்பு, பெற்றுக் கொள்வார்.*

*2. சாமான்துறையில் கப்பலில் ரப்பரை ஏற்றும் தருணத்திலும், எனது திணைக்களத்தின் போக்குவரத்து சேவை கிடைக்காத போதும், இப்போக்குவரத்து சேவை தேவைப்படும். எனவே, இச்சேவை கிரமமாக தேவைப்படாது. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர், குறுகிய அறிவித்தலில் இரவிலும் பகலிலும் இச்சேவையை ஏற்று நடாத்துதற்கு தயாராகவிருத்தல் வேண்டும்.*

*3. எந்த ஒரு ஒப்பந்தத்தையோ, அல்லது எல்லா ஒப்பந்தங்களையுமோ, கேள்விக்கிடமின்றி நிராகரிக்கும் உரித்தையும், எந்த ஒரு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியை முழுக்காலத்திற்கோ, அன்றி இடைக்காலத்திற்கோ, ஏற்றுக் கொள்ளும் உரித்தையும், அன்றி 30.9.71 இற்கு முன்னரே அவ்வொப்பந்தத்தை நிறுத்தும் உரித்தையும், பொருள் கொள்வனவு ஆணையாளர் தமக்கென தனியே ஒதுக்கியுள்ளார்.*

*4. 250 ருத்தலைக் கொண்ட ஒரு ரப்பர் கட்டை ஏற்றிச் செல்வதற்கான வீதத்தையும், சாமான்துறைக்கு ரப்பர் கட்டுக்களை ஏற்றிச் செல்வதில் தாமதக் கட்டணம் இடம்பெறின் அதனையும் குறிப்பிட்டு, கேள்விகளை இரட்டைப் பிரதிகளில், 1970 ம் ஆண்டு அக்டோபர், 28, மு. ப. 11.00 மணிக்கு முன், பொருட் கொள்வனவு ஆணையாளருக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தபாலின் மேற்புறத்து இடது மூலையில் " ரப்பரை ஏற்றிச் செல்வதற்கான கேள்விகள் " எனக் குறிப்பிடல் வேண்டும்.*

*5. ஏற்றுமதிப் பொருட்களை ஏற்றிச் செல்லுங்கால், அவைகளுக்கு நேரும் இழப்புகள், சேதங்கள் மூலம் ஏற்படும் கோரிக்கையை செலுத்தற்கு தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர் பொறுப்பேற்றல் வேண்டும்.*

*6. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர் ஒரு ஒப்பந்தத்தை செய்து கொள்வதோடு பிணைப் பணமாக ரூ. 2500/- உம் கட்டுதல் வேண்டும். போக்குவரத்து சேவை திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே இப்பணம் திருப்பி வழங்கப்படும்.*

*7. ஒப்பந்தக்காரரால் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஒரு ஊழியரால், அல்லது அவ்வூழியர் சார்பில், 1934 ம் ஆண்டின் 19 ம் இலக்க வேலையாட்கள் நஷ்டஈட்டு கட்டளைச் சட்டத்தின்கிழ், அன்றி அதில் ஏற்படுத்தப்பெற்ற சட்ட பூர்வமான திருத்தங்கள், திரிபுகள், நீட்டல்களின்கிழ் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கையை தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர் ஈடுசெலுத்தல் வேண்டும்.*

*8. இச்சேவையை நடாத்துவதில் இலங்கையரையே வேலைக்கு அமர்த்தல் வேண்டும். ஒரு வேலையாள் விரும்பத்தக்கவரல்ல என கருதுமிடத்து, அவரை வேலைக்கமர்த்துவதற்கு மறுப்புத் தெரிவிக்கும் உரித்தை பொருள் கொள்வனவு ஆணையாளர் தமக்கே தனியாக ஒதுக்கியுள்ளார். அங்ஙனமாயின் தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர், அவ்வேலையாளை உடனடியாக வேலை நீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

*9. ஒப்பந்தகாலம் முழுவதற்கும், தமது வாகனங்களுக்கு முழுக்காப்புறுதி பாதுகாப்பை, தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர் பெற்றுக் கொள்ள வேண்டும்.*

*10. மேலதிக விபரங்களை 4 வது தட்டு அவுஸ்திரேலியா கட்டிடம் கொழும்பு 1 என்ற விலாசத்தில் இருக்கும் பொருள் கொள்வனவு ஆணையாளர் கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.*

*கி. பத்மநாதன்,*
*பொருள் கொள்வனவு ஆணையாளர்.*

*பொருள் கொள்வனவு ஆணையாளர் திணைக்களம்,*
*தபால் பெட்டி 147,*
*கொழும்பு.*

*10-415—16.10.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,928*

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## சுகாதார திணைக்களம்

### பாவனைக்கற்ற குளிர்சாதனப் பெட்டி ஏல விற்பனை

கீழ் குறிக்கப்பட்டிருக்கும் ஹோமாகம ஆசுபத்திரிக்குரிய குளிர் சாதனப்பெட்டி ஒன்று 27.10.70 திகதி காலை 10 மணியளவில் ஆசுபத்திரி வளவுள் பகிரங்க ஏல விற்பனையில் விடப்படும்.

1. மண் எண்ணெய் குளிர்சாதனப் பெட்டி (இலெக்ரோலக்ஸ்) மாதிரி எல். கே. 550

அதிகக் கூடிய ஏலதாரர், உடனடியாகப் பணத்தைச் செலுத்தி குளிர்சாதனப் பெட்டியை ஆசுபத்திரியில் இருந்து எடுத்துச் செல்ல வேண்டும்

விற்பனையில் பங்குபற்ற எண்ணுபவர்கள் ஹோமாகம வைத்திய அதிகாரியின் அனுசரணையுடன் குளிர்சாதனப் பெட்டியை அலுவலக நேரங்களில் 24.10.70 ம் திகதியில் இருந்து பார்வையிடலாம்.

எச். சி. கோமஸ்,
சுகசேவை அத்தியட்சகர்,
கொழும்பு.

சுகசேவை அத்தியட்சகர் அலுவலகம்,
83, கின்சி ரோட்,
கொழும்பு.

10–406—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

---

### மன்னார்க் கச்சேரி—ஏல விற்பனை

1970 ஆம் ஆண்டு ஒத்தோபர் 30 ஆம் நாள் முற்பகல் 10.00 மணிக்கு சிலாவத்துறை கடற்கரையில் கீழ்க்குறிப்பிடப்படும் பொருள்கள், ஏலத்தில் விற்கப்படும் :—

வள்ளம் (இல. 779 கியூ.)
2 பாய்கள்
1 தலையணை
2 பாய்மரம்
2 கயிறு
1 பாய்மரக் குறுக்குக் கம்பு
5 தண்டுக்கம்புகள்
2 மரத்தூண்கள்
2 வெற்றுப்போத்தல்கள்
1 தகர அடுப்பு
1 சிறிய தகரப் பெட்டி

ச. கதிர்காமநாதன்,
மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும்
சுங்க அதிகாரியும்.

மன்னார்க் கச்சேரி,
1970 ம் ஆண்டு ஒத்தோபர் மீ 4 ந் உ.

10–493—16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928.

---

# நானாவித அறிவித்தல்கள்

இல. வெ.மு/3/136

## கல்வி அமைச்சு

### உலக வாலிபர் மன்றம்—1971 ஆம் ஆண்டு—நியூயோக்

நியூயோக்கில் 1971 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரை நடைபெறவிருக்கும் 1971 ஆம் ஆண்டு உலக வாலிபர் மன்றத்துக்கு ஒரு பிரதி நிதியைத் தெரிவு செய்யும்பொருட்டு அரசினர் பாடசாலைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளிலும் க. பொ. த. (உயர்தர) பத்திர முதல் வருட வகுப்புகளிலும் பல்கலைக் கழகங்களில் முதல் வருட வகுப்புகளிலுமுள்ள மாணவர்களிடமிருந்து (ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **நோக்கங்களும் இலக்குகளும்.**—மன்றத்தின் ஆதரவில், உலகத்தின் பல்வேறு நாடுகளிலுமிருந்து மாணவர்கள் ஐக்கிய அமெரிக்காவைத் தரிசித்து, பகிரங்க கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், வீடுகளில் தங்குதல், பாடசாலைகளைத் தரிசித்தல், ரெலிவிசன் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறு விடயங்களில் பங்குகொள்வர். பலதரப்பட்ட பார்வையாளர்களுக்கு இவ்விடயங்கள் அவைகளில் பங்கு பற்றும் மாணவர்களின் சுய, விவேக கலாச்சார பின்னணிகளை விளக்குவதற்கு ஏதுவாக அமையும், மேலும், அமெரிக்கக் குடும்பங்களுடன் வாழ்ந்து அந்நாட்டுக் கல்வி, அரசாங்க முறைகளை அவதானிப்பதற்கும் தனது நாட்டு விடயங்கள் பற்றி பகிரங்க கலந்துரையாடல்களில் கலந்து கொள்தற்கும் மற்றத் தேசங்களிலிருந்து வரும் வாலிபர்களுடன் கூடி அனுபவம் பெறுதற்கும் இம்மன்றத்தில் கலந்து கொள்பவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன.

1971 ஆம் ஆண்டு மன்றத்துக்கு 43 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் நியூயோக்கில் கூடுவர். இலங்கை முழுவதும் நடைபெறும் ஒரு போட்டி மூலம் ஒருவரைத் தெரிந்தெடுத்து இந்நாட்டு பிரதிநிதியாக இலங்கையும் அனுப்ப வேண்டும். ஒரு நாட்டிலிருந்து ஒரு பிரதிநிதியே அனுப்பப்படுவதால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதி அந்நாடு அனுப்பக்கூடிய மிகச் சிறந்தவராய் இருக்க வேண்டும் ஆகையால் விண்ணப்பதாரிகள் இலங்கையின் சரித்திரம், பழக்க வழக்க முறைகள், சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் விடயங்களில் விரிவான அறிவு பெற்றுள்ளவராயும், ஆங்கில மொழியில் உயர்ந்த தேர்ச்சி பெற்றவராயும் இருக்க வேண்டும்.

3. **நிகழ்ச்சி நிரலும் திகதிகளும்.**—இம்மன்றம் 1971ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆந் திகதி தொடக்கம் ஒரு வாரம் அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகி 1971 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பிற்பகுதி முடிவடையும். இவ்வாரங்களில் பிரதிநிதிகள் உயர்தர பாடசாலைகளையும் பல்கலைக் கழகங்களையும் தரிசித்தல், அமெரிக்க குடும்பங்களுடன் சீவித்தல், கருத்தரங்குகளிலும் கற்கைத் திட்டங்களிலும் பங்குகொள்தல், ரெலிவிசனிலும் பகிரங்க மேடைகளிலும் உரையாற்றல் போன்ற விடயங்களில் கலந்துகொள்வார்கள். இம்முயற்சிகளில் பெரும்பாலானவை நியூயோக் பட்டணப் பகுதியில் நடைபெறும், அவர்கள் வாஷிங்றனுக்கும் செல்வார்கள். பிரதிநிதிகள் ஐக்கிய அமெரிக்காவில் கூடுதலான காலம் தங்கலாகாது ; அவர்கள் யாவரும் சொந்த இடங்களுக்கு மார்ச் மாத முடிவில் திரும்பிவிடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

4. **இவ்வளிப்பின் கீழுள்ள நயங்கள் :** தெரிவு செய்யப்படும் அபேட்சகருக்கு இலங்கையிலிருந்து நியூயோக்குப் போய் வருவதற்கான ஆகாய விமான இலவசப் பிரயாணச் சீட்டு வழங்கப்படும். உணவு, உறையகம் ஆதியன ஐக்கிய அமெரிக்க நாட்டின் விருந்தளிக்கும் குடும்பங்களால் வழங்கப்படும்.

5. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.—

(அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ஆ) ஓர் அரசினர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் க. பொ.த. (உயர்தர) பத்திர முதல் வருட வகுப்பு மாணவராக அல்லது பல்கலைக் கழக முதல் வருட வகுப்பு மாணவராக இருக்க வேண்டும்.

(இ) தனது வகுப்பில், படிப்பில் முதல் நான்கு பிள்ளைகளுக்குள் இருக்க வேண்டும் (வகுப்பில், ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகள் இருப்பின் அவை ஒருமித்துக் கணிக்கப்பட வேண்டும்.)

(ஈ) 30.9.50 க்கும் 1.10.54 க்கும் இடையில் பிறந்தவராய் இருக்க வேண்டும்.

(உ) க. பொ.த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் " அ " ஆம் பாடத்திட்டத்தில் கீழ் குறைந்த பட்சம் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(ஊ) ஆங்கிலம் பேசுவதிலும் எழுதுவதிலும் தெளிவாகவும் வாக்கு சாதுரியம் உள்ளவராகவும் இருக்க வேண்டும் ;

(எ) பல்வேறு வெளி முயற்சிகளில் உற்சாகமாகப் பங்கு பெறுபவராய் இருக்க வேண்டும் ;

(ஏ) பகிரங்க மன்றங்களிலும் கூட்டங்களிலும் ரெலிவிசன் நிகழ்ச்சிகளிலும், வகுப்பறைக் கலந்துரையாடல்களிலும் பங்குபற்ற ஆயத்தமாய் இருக்க வேண்டும் ;

(ஐ) உலக விடயங்கள் பற்றி நன்கு அறிந்திருப்பதுடன் அவற்றில் அக்கறை உள்ளவராகவும், சர்வதேச தற்கால பிரச்சனைகள் அறிந்தவராகவும், இலங்கை உலகின் மற்றப் பகுதிகளுடன் எவ்விதத் தொடர்பு கொண்டுள்ளது என்பது பற்றியும் மற்றத் தேசத்தவர்களையும், தேசங்களையும், அவைகளின் வாழ்க்கை முறைகளையும் அறிய ஆவல் உடையவராயும் இருக்க வேண்டும் ;

(ஒ) சிறந்த நல்லொழுக்கமும், கண்ணியமும் உள்ளவராகவும் மற்றவர்களுடன் ஒத்துழைக்கக்கூடியவராயும், மற்ற சாகியத்தினரின் கொள்கைகளையும், சமயங்களையும், அரசியல் தத்துவங்களையும் மதிப்பவராகவும், தனக்காக மற்றவர்களால் எடுக்கப்படும் முயற்சிகளை உணரும் தன்மையுடையவராயும், அவற்றைப் பாராட்டக்கூடியவராயும் இருக்க வேண்டும் ;

(ஓ) ஐக்கிய அமெரிக்காவில் இருக்கும் காலத்தில் கடினமான படிப்புத்திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு ஆயத்தமாகவும், தனது நாட்டுக்குத் திரும்பிய பின் தனது நாட்டு (இலங்கை) மக்களின் சேவைக்காக தன்னிச்சைத் திட்டங்களில் கலந்து கொள்ளவும் வேண்டும் ;

(ஔ) சிறந்த தேகாரோக்கியம் உடையவராயும், ஐக்கிய அமெரிக்காவில் 3 மாத கடும் உழைப்பைத் தாங்கக்கூடிய உடல்நலமுடையவராயும் இருக்க வேண்டும் ;

(க) ஐக்கிய அமெரிக்காவுக்கு போய்வரும் செலவை சுலபமாகத் தாங்கிக் கொள்ளக்கூடிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராய் இருக்கலாகாது ;

(கா) இதற்குமுன் பிற தேசங்களுக்கு சென்றவராய் இருக்கலாகாது ;

(கி) தெரிவு செய்யப்படின் ஐக்கிய அமெரிக்காவுக்குப் போவதற்கு பெற்றோரின் அனுமதியைப் பெறக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(மேற்குறித்த தகைமைகளைத் திருப்தி செய்யாத அபேற்சகர்கள் விண்ணப்பிக்கலாகா)

**6. விண்ணப்பங்கள்.**—இவ்வமைச்சின் வெளிநாட்டு மூகவராண்மைக் கிளையிலிருந்து பெற்றபாலனவான விசேட படிவத்தில் விண்ணப்பங்களைத் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பதாரி தயாரித்து, அவற்றை 31.10.70 க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்குக் கடுகதிதபால் மூலம் அனுப்புமாறு பாடசாலை அதிபரை/பல்கலைக் கழகப் பீடத் தலைவரை வேண்டி, பின்வரும் சாதனங்களுடன் விண்ணப்பத்தை அவரிடம் 26.10.70 க்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும்.

"வெளிநாட்டு மூகவராண்மைகள் கிளை,
கல்வி அமைச்சு, மலாய் வீதி,
கொழும்பு 2 ".

கடுகதித் தபாலின் முத்திரைச் செலவைப் பொறுக்க வேண்டுமென பாடசாலை அதிபர்/பீடத் தலைவர் வேண்டின் விண்ணப்பதாரி அச்செலவைக் கொடுக்கவேண்டும்.

**விண்ணப்பங்களுடன் இணைகப்பட வேண்டிய சாதனங்கள் :**

(அ) பின்வரும் தகவல்களை உள்ளடங்கி, 700—1,000 சொற்களில் ஆங்கில மொழியில் எழுதப்படும் சுயசரிதை.

(i) சொந்த வாழ்க்கை விபரமும் குடும்ப வாழ்க்கையும் ;

(ii) முக்கிய படிப்புகள், விசேட ஆர்வங்கள், சொந்த இயல்புகள் ;

(iii) ஈடுபடும் விளையாட்டுகளும் பொழுதுபோக்கு முயற்சிகளும் ;

(iv) திறமைகள் (வாய்ப்பாட்டு, நடனம், வாத்தியக் கருவி) ;

(v) சமய நம்பிக்கைகளும் அறநூல் மனோபாவமும் ;

(vi) தொழில் சம்பந்தப்பட்ட அபிலாஷைகள்.

(தெரிவு செய்யப்பட்ட அபேட்சகரின் சுயசரிதையை அபேட்சகர்களை விருந்தாளிகளாகக் கொள்ளும் அமெரிக்க குடும்பங்களுக்கும் மற்றும் பிரதிநிதிகளுக்கும் அச்சிட்டு விநியோகிப்பதற்காக நியூயோர்க்குக்கு அனுப்பு வைக்கப்படும்.)

(ஆ) "எனது நாட்டில் நிலவுவதாக நான் கருதும் மிக முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர்ப் (அகில தேச அடிப்படையிலல்ல) பிரச்சனையும் இதனைத் தீர்த்து வைக்கக்கூடிய வசதிகளும்" என்ற விடயம் பற்றி ஆங்கிலமொழி மூலம் 700—1,000 சொற்களில் கட்டுரை ;

(இ) "எனது சந்ததியினர் அடுத்த இருபது வருடங்களுக்குள் தீர்த்து வைக்க வேண்டியதென நான் கருதும் மிகப் பாரதூரமான அகில உலகப் பிரச்சனை" என்ற விடயம் பற்றி ஆங்கில மொழியில் 700—1,000 சொற்களில் கட்டுரை ;

(ஈ) சிபார்சு செய்யும் மூன்று கடிதங்கள்—

(i) விண்ணப்பதாரியின் படிப்புத் திறமையைப் பற்றியும் ஒழுக்கம் பற்றியும் சான்று பகரக்கூடிய ஆசிரியர்/விரிவுரையாளர் (பல்கலைக் கழக மாணவரைப் பொறுத்தவரையில்) ஒரு வருடமிருந்து ஒரு கடிதம் ;

(ii) விண்ணப்பதாரியைப் பல ஆண்டுகள் அறிந்திருந்த பொறுப்புவாய்ந்த இரு பெரியவர்களிடமிருந்து (இனத்தவரல்லாத) கடிதங்கள்.

**குறிப்பு.**—சுயசரிதையும் இரண்டு கட்டுரைகளும் விண்ணப்பதாரியின் சொந்த முயற்சியாகவே இருப்பதுடன் அவைகள் விண்ணப்பதாரியாலேயே ஆக்கப்பட்டவை என்று பாடசாலை அதிபர்/பல்கலைக் கழகப் பீடத் தலைவர் அவை ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத்த வேண்டும். தெரிவு செய்யப்பட்டவரின் கட்டுரைகள் ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்பப்பட வேண்டியவை. எனவே அவை முழுத் தாள்களில் (இரண்டாக மடிக்கப்பட்டு அல்லது கிழிக்கப்பட்டு) ஒரு பக்கத்தில் மட்டும், இடதுபக்கத்தில் $1\frac{1}{2}$ அங்குல ஓரம் விடப்பட்டு எழுதப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 31.10.70 ஆகும். தாமதித்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. பூரணமற்ற விண்ணப்பங்களும் இவ்விளம்பரத்துக்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணங்பங்கள் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் விண்ணப்பங் ,ள் பெற்றுக் கொண்டமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் விண்ணப்பதாரிகள் இக்கந்தோருக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும்.

**7. தெரிவு.** — விண்ணப்பங்கள், சுயசரிதைகள், இரண்டு கட்டுரைகள் ஆகியவற்றை ஒரு குழு பரிசீலனை செய்து ஆரம்பத் தெரிவை நடாத்தும். இவ்வாறு செய்யப்படும் சிறு தொகையினரின் ஆங்கில பேச்சுத் திறனை, இலங்கை, உலக விடயங்கள் பற்றி முன்னேற்பாடின்றிப் பேசும் திறமை ஆகிய வற்றைக் கணிப்பதற்காக கொழும்பில் ஒரு நேர்முகப் பரீட்சை மத்தியஸ்தர் குழு ஒன்றால் நடாத்தப்படும்.

மத்தியஸ்தர் குழுவினால் தெரிவு செய்யப்படும் ஒரு விடயம் பற்றி அவர்கள் முன்னிலையிலோ அல்லது அவர்களால் நியமிக்கப்படும் ஒரு மேற்பார்வையாளர் முன்னிலையிலோ கிட்டத்தட்ட 500 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுமாறு நேர்முகப் பரீட்சைத் தினத்தன்று வேண்டப்படுவர். விண்ணப்பதாரியின் ஆங்கில எழுத்துத் திறமையையும் பல விடயங்கள் பற்றிய அறிவையும் கணிப்பதாக இப்பரீட்சை அமையும் இக்கட்டுரையும் ஏற்கனவே விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளுடன் ஒப்பிட்டு ஆராயப்படும்.

8. தெரிவு தொடர்பாக எவ்விதமேனும் ஆதரவு வேண்டுதல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தல் போன்ற காரணத்தைக்கொண்டே விண்ணப்பதாரி தகுதியற்றவராக்கப்படுவார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

வெளிநாட்டு மூகவராண்மைகள் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 9 ந் உ.

10-606— 16.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,928

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ௵ யூன் ௴ 2 ஆந் ௳.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.